விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
MoneyGram
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 06 திங்கட்கிழமை (21.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 002

## வவுனிக்குளத்தில் காணாமல்போன தந்தை, மகள் சடலமாக மீட்பு





**சோகமயமானது முல்லைத்தீவு**

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு, வவுனிக் 19

## மருதனார்மடம் கொத்தணி 90 ஆக உயர்ந்தது

**நேற்றும் 2 பேருக்கு கொரோனா**

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் தொற்றுக்குள்ளானவர்களுடன் நேரடியாகத் தொடர்புடைய தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உட்பட்ட பகுதியைச் சேர்ந்த 120 பேரின் 19

### இந்திய மீனவர்கள் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)
காரைநகர்ப் பகுதியில் எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் நான்கு இந்திய மீனவர்கள் 19

### யாழ்.பல்கலை மாணவனுக்கு கொரோனா

(வவுனியா)
யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவன் ஒருவர் கொழும்பு சென்ற நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 19

- பொதுமக்கள் ஒத்துழைக்காவிட்டால் -

# பலி எண்ணிக்கை அதி உச்சமடையும்

## தொற்று நோய் ஆய்வுப் பிரிவு மீண்டும் எச்சரிக்கை



*(கொழும்பு)*
"பொதுமக்களின் நடத்தை அடிப்படையிலேயே எதிர்காலம் தீர்மானிக்கப்படும். எனவே சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றி மக்கள் பொறுப்புடன் செயற்படாவிட்டால் கொரோனா வைரஸ் பரவல் எமது கட்டுப்பாட்டை மீறி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதி உச்சமடையும்"
இவ்வாறு தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சுதத் சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார். *(19ஆம் பக்கம் பார்க்க)*

### வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளரின் வாகனம் மீது தாக்குதல்; ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் பயணித்த அலுவலக வாகனம் மற்றும் சாரதி மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். 19

### ஆட்சியமைப்பது தொடர்பில் ஈ.பி.டி.பி, முன்னணியுடன் நேரில் பேச்சு நடத்துவோம்

**மாவை சேனாதிராஜா அறிவிப்பு**

(யாழ்ப்பாணம்)
"யாழ்.மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பவற்றில் ஆட்சியமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் 19

### கொரோனாவால் 592 பேர் பாதிப்பு

(கொழும்பு)
நாட்டில் நேற்று மேலும் 592 பேர் 19

### வெளிநாடு வாழ் இலங்கையர்கள் அனுமதியின்றி நாடு திரும்பலாம்

(கொழும்பு)
கொரோனாத் தொற்று நோய நெருக்கடி காரண மாக நாடு திரும்ப 19



### ரூ.26 மில். பெறுமதியான நிவாரணப் பொருட்கள் யாழில் வழங்கி வைப்பு

**அரச அதிபர் மகேசன்**

6ஆம் பக்கம் பார்க்க

### அமைச்சரவைக்குள் புகுந்தது கொரோனா

**4 பணியாளர்களுக்குத் தொற்று**

(கொழும்பு)
அமைச்சரவைச் செயலகத்தில பணிபுரியும் நான்கு பேருக்குக் கொரோனா 19

### கொரோனாவுக்கு நேற்றும் 5 பேர் பலி

19ஆம் பக்கம் பார்க்க

### அனைத்துப் பாடசாலைகளையும் திறக்குமாறு அரசு பிடிவாதம்

**கல்வி அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு**



(கொழும்பு)
சுகாதார வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு பாடசாலைகள் விரைவில் திறக்கப்பட வேண்டும் என்று தற்போதைய அரசு பிடிவாதமாக உள்ளது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் ஊடகங்களிடம் தெரி 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறுபான்மையினத்தவர்களின் ஆதரவின்றி வெற்றி பெற்றவர்கள் ராஜபக்சக்கள்

## அமைச்சர் ரத்னாயக்க தெரிவிப்பு

(நுவரெலியா)

போரை முடிவுக்கு கொண்டுவர முடியாது என்றனர், ஆனால் ராஜபக்சக்கள் அதனை முடிவுக்கு கொண்டு வந்தனர். அதே போல சிறுபான்மையினத்தவர்களின் ஆதரவின்றி ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற முடியாது என்ற நிலையையும் ராஜபக்சக்களே மாற்றியமைத்தனர் என்று அமைச்சர் சி.பி. ரத்னாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தை சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யும் திட்டத்துக்கு இணையாக கொத்மலை பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"எம்.சி.சி. உடன்படிக்கையில் கைச்சாத்திடாததால் நாட்டுக்கு நஷ்டம் எனவும், கடன்களை பெறமுடியாது எனவும் விமர்சிக்கப்படுகின்றது. நாம் கடன் வாங்கியது போதும். தேசிய பொருளாதாரத்தை மையப்படுத்தியே இம்முறை வரவு - செலவுத் திட்டம்கூட தயாரிக்கப்பட்டுள்ளது. கிராமங்களை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

துறைமுகத்தை இந்தியாவுக்கோ அல்லது சீனாவுக்கோ வழங்குவதற்கு நாம் தயாரில்லை. எமது நாட்டு தேவைக்காகவே துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டது. ஆனால் கடந்த அரசாங்கம்தான் 99 வருடகால குத்தகைக்கு துறைமுகமொன்றை வழங்கியது. கடந்த ஆட்சியின்போதே பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது. இதனால்தான் நாட்டை முன்னோக்கிகொண்டுசெல்வதற்கு எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைத்தது.

ஜனாதிபதி தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்ச வெற்றி பெற மாட்டார் எனவும், அவருக்கு சிறுபான்மையின மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என்றும் கூறப்பட்டது. இந் நிலைமையும் மாற்றியமைக்கப்பட்டது.

ராஜபக்சக்களால் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முடியாது என அன்று குறிப்பிட்டனர். ஆனால் ராஜபக்சக்கள் அதனை செய்து முடித்தனர். நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது எனவும் சுட்டிக்காட்டினர். எனினும் அபிவிருத்தியையும் செய்து காட்டினர். அது மட்டுமல்ல சிறுபான்மையினத்தவர்களின் ஆதரவின்றி தேர்தலில் வெற்றிபெற முடியாது என்றனர். ஆனால் ராஜபக்சக்கள் வெற்றி நடைபோட்டனர்" என்றார். (ஞா)

# தனிமையில் இருந்தவர் சடலமாக மீட்பு

## உரும்பிராயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உரும்பிராய் பேச்சியம்மன் ஆலயத்திற்கு அருகில் வீட்டில் தனிமையில் வசித்தவர் சடலமாக மீட்கப்பட்டிருக்கின்றார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவர் குறித்த வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக அவருடைய நடமாட்டத்தை காணாத நிலையில் அயலவர்களும், உறவினர் களும் தேடிய போது, படுக்கை யில் சடலமாக மீட்கப்பட்டிருக் கின்றார். இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் நாகராசா நந்தகு மார் (வயது 42) என்பவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டுள்ளார். (ஞா)


**மணமகன் தேவை**

94, அவிட்டம் 4, பாவம் 42,
டொக்டர் மணமகளுக்கு
டொக்டர் / எஞ்சினியர்
மணமகன் தேவை.

(5012)

**துர்க்கா திருமண சேவை**
**077 818 5978, 075 011 1122**


# பயணக் கட்டுப்பாடு விதிக்காவிடின் நாட்டில் பெரும் ஆபத்து ஏற்படும்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

வரவிருக்கும் பண்டிகைக் காலங்களில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை கடுமையாகப் பின்பற்றாவிட்டால் எதிர்காலம் ஆபத்தானது என்று இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த, மேல் மாகாணம் உள்ளிட்ட அபாய வலயங்களுக்கு கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என்று சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண கேட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் வரவிருக்கும் பண்டிகை காலங்களில் கோவிட்-19 விதிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்கத் தவறினால் எதிர்காலத்தில் பெரும் ஆபத்து உண்டு.

தினமும் 500 க்கும் மேற்பட்டவர்களுக்கு கோவிட் - 19 நோய்த் தொற்று உள்ளமை பதிவாகும் நேரத்தில், பொது மக்களின் பொறுப்பற்ற நடத்தைகளை அவதானிக்க முடிகின்றது.

அடையாளம் காணப்பட்ட மூன்று குழுக்களின் நடவடிக்கைகள் கோவிட்-19 நோய்த் தொற்று மேலும் பரவுவதற்கு வழிவகுக்கும்.

தொழிலை முடித்து தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பும் நபர்கள், மேல் மாகாணத்தில் இருந்து வெளியிடங்களுக்குப் பயணங்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் சிறிய நகரங்களில் வசிப்பவர்கள் பொருட்களை வாங்க நெரிசலான பகுதிகளுக்கு வருகை தருதல் ஆகிய மூன்று தரப்பினராலும் கொரோனா வைரஸ் பரவும் அபாயத்தை ஏற்படுத்தும்.

எனவே பண்டிகைக் காலங்களில் தகுந்த நடவடிக்கை எடுத்து பயணக் கட்டுப்பாடு களை விதிக் குமாறு அரசையும் சுகாதார அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கின்றோம் என்றார். (ஞா)


**மணமக்கள் தேவை**


யாழ். இந்து, 1987, மிருகசீரிடம் 4ம் பாதம்,
சூரி, செவ் 3 இல், கி.பா 6, தனியார்
நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கும்
1991, மூலம் 1ம் பாதம், செவ் 6 இல்,
கி.பா 39 1/4, அரச பணிபுரியும்
மணமகளுக்கும் மணமக்கள் தேவை.

(4997)

**077 616 1739**


**மரண அறிவித்தல்**

**கந்தையா கிருஷ்ணன்**



தோற்றம் : 20.07.1939
மறைவு : 20.12.2020

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தை, மயிலிட்டி தெற்கு மற்றும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா - சிவபாக்கியம் தம்பதியினரின் மகன் கிருஷ்ணன் நேற்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும், யசிந்தா (வவுனியா), காலஞ்சென்ற சயந்தன் மற்றும் குமணன்(கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் இன்று (21.12.2020) திங்கட்கிழமை காலை 8மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-974)

இல. 128, யாழ். வீதி,
வவுனியா.

தகவல்:-
திருமதி யசிந்தா ஜெயநாதன் (மகள்)

**கண்ணீர் அஞ்சலி**



யா/ அத்தியார் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கப் பொருளாளர்
திரு. **தி. முத்துக்குமார்** அவர்களின்
பாசமிகு தாயாரும் எமது கல்லூரியின்
பழைய மாணவர் நலன் விரும்பிகள் சங்க
லண்டன் கிளையின் தலைவர்
திரு. **மா. திருவாசகம்** அவர்களின்
சகோதரியுமான

**அமரர்**
**மங்களேஸ்வரி தியாகராஜா**

அவர்கள் காலமான செய்தி கேட்டு
ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய கல்லூரிச் சமூகம்
சார்பில் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-972)

பழைய மாணவர் சங்கம்
யா/அத்தியார் இந்துக் கல்லூரி - நீர்வேலி

**கண்ணீர் அஞ்சலி**



எங்கள் குரும்பசிட்டி அப்பு
மூளாய் **நாகலிங்கம்** அவர்களின்
(முன்னாள் வெலிமடை நாதன் ஸ்ரோர்ஸ்
உரிமையாளர் ) மருமகன்

**அமரர்**
**கந்தையா கிருஷ்ணன்**

அவர்களின் மறைவுக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

077 727 9238

தங்க. முகுந்தன் குடும்பம்
முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர்.
மூளாய், சுழிபுரம்.

# நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கை அரசாங்கத்திற்கு கால நீடிப்பு வழங்கக்கூடாது - எம்.கே.சிவாஜிலிங்கம்



(யாழ்ப்பாணம்)

**நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கை அரசாங்கத்திற்கு கால நீடிப்பு வழங்கக்கூடாது என தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தீர்மானித்துள்ளதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**

நேற்று யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரனின் அலுவலகத்தில் இடம்பெற்ற கட்சி கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் தமிழர் தரப்பில் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் சம்பந்தமாக ஆலோசனை பெறுவதற்காக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நான்கு கட்சிகள் அடங்கிய கூட்டம் ஒன்று கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

அந்தக் கூட்டத்தில் மூன்று விடயங்களை முக்கியமாக ஆராய்ந்து இருந்தோம். ஜெனிவா கூட்டத்தொடரில் எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரசியல் தீர்வு யோசனையை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் மாகாணசபை தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி வடக்கு,கிழக்கு மாகாணங்களில் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்ற விடயங்களை ஆராய்ந்திருந்தோம்.

இதில் குறிப்பாக ஜெனிவா கூட்டத்தொடர் சம்பந்தமாக தமிழர் தரப்பிலிருந்து 3 தமிழ் தேசிய பிரதான அணிகளும் சேர்ந்து அதனுடைய 13 பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி ஒரு யோசனை சமர்ப்பித்தால் அதே யோசனையை இங்கு இருக்கக் கூடிய சிவில் அமைப்புக்கள், மதப் பெரியார்கள் அதேபோல பல்கலைக்கழக மாணவர்கள் போன்ற பல்வேறு அமைப்புகளும் புலம்பெயர் அமைப்புகள் ஏற்றுக்கொண்டால் அது ஒரு சிறந்த நிலைப்பாடாக இருக்கும் என்ற கருத்திலே நாங்கள் ஒருமித்த நிலைப்பாட்டிற்கு வந்திருக்கின்றோம்.

அதிலே குறிப்பாக கருத்தொற்றுமை வருகின்றபோது கால நீடிப்பை மறைமுகமாகவோ நேரடியாகவோ வலியுறுத்துவதாக அமையக்கூடாது என்ற விடயத்தில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

இனிமேல் எக்காரணம் கொண்டு நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கை அரசாங்கத்திற்கு கால நீடிப்பை வழங்கப்படக் கூடாது என்ற நிலைப்பாட்டுக்கு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்கு வந்திருக்கின்றது.

நாங்கள் ஒரு யோசனை தயாரித்திருக்கின்றோம். இந்த யோசனை 3 தமிழ்த்தேசிய கட்சிகளிடமும் பிரஸ்தாபித்து எங்களுடைய கட்சியை தவிர தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியிடம் சமர்ப்பித்து எல்லோரும் இணைந்து ஒரு முடிவு எடுக்கக்கூடியவாறாக தீர்மானித்திருக்கிறோம்.

அதாவது முக்கியமாக இரண்டு கோரிக்கைகளை நாங்கள் வைத்திருக்கின்றோம். அதேபோல தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் கூட்டமைப்பு ஏதாவது யோசனைகள் முன்வைப்பார்களாக இருந்தால் அதற்கு ஏற்றவாறு முடிவுகளை மாற்றலாம்.

ஆனால் எந்தவிதத்திலும் எந்தக் காரணத்தைக் கொண்டும் நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கை அரசாங்கத்திற்கு கால நீடிப்பை வழங்குவதில்லை என்ற அடிப்படையில் கோரிக்கையை முன்வைக்க இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவித்தார். (நி-4)

# சிவில் உடையில் பொலிஸார் கடமையில்



(கொழும்பு)

பொதுப் போக்குவரத்து சேவைகளில் பொலிஸார் சிவில் உடைகளில் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

கவனயீனமாக வாகனங்களை செலுத்துதல், சுகாதார வழிகாட்டல்களை மீறுவோரை அடையாளம் காணும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி வரை நாடு முழுவதும் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று மற்றும் வாகன விபத்துகளை தடுக்கும் நோக்கில் பொலிஸார் பொது போக்குவரத்துகளில் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை, பண்டிகைக் காலம் நெருங்குவதால் கொண்டாட்டங்களை குடும்பத்தினருடன் மாத்திரம் மட்டுப்படுத்துமாறும் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (நி-4)

# பட்டதாரிப் பயிலுநர்களுக்கான கலந்துரையாடல்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரி பயிலுநர்களாக கடமையேற்று ஒரு வருட பயிலுநர் காலப்பகுதியை நிறைவு செய்துள்ள 86 பட்டதாரி பயிலுநர்களை நிரந்தர நியமனத்தின் போது பொருத்தமான துறைகளிற்குள் உள்வாங்குதல் தொடர்பான விசேட கலந்துரையாடலானது மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனின் தலைமையில் மாவட்ட செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அரச திணைக்களங்களின் நியமனங்களின் போது சில பிரிவுகளில் அதற்கென சிறப்புப் பட்டம் கொண்டிருக்க வேண்டிய துறைகள், ஏலவே பயிற்சிக்காலங்களில் கடமையாற்றிய பிரிவுகளில் பெற்றுள்ள பயிற்சிகள் மற்றும் வெற்றிடங்கள் என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், பிரதம கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர், விடயத்திற்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர், பட்டதாரி பயிலுநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-281)

# அணைக்கட்டு மீதான போக்குவரத்தை தவிர்க்கவும்- பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்

(அக்கராயன்)

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் குளங்கள் அனைத்தும் நீர் நிரம்பி உள்ளதன் காரணமாக சிறுவர்கள், பெரியவர்கள் குளங்களின் சூழலுக்கு செல்ல வேண்டாம் என முல்லைத் தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மழை காலத்தில் குளங்கள் நிரம்புகின்ற போது குளச் சூழல் ஆபத்து மிகுந்ததாகவே இருக்கும்.

மேலும் அணைக்கட்டு மீதான போக்குவரத்தை இயன்றளவு தவிர்க்கவும் எனவும் தெரிவித்தார். (5-4-350)

# ஏப்ரலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல்

(கொழும்பு)

அடுத்த ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் மாகாண சபை தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதுடன், அதனை பழைய முறைப்படி நடத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளன.

மாகாண சபைத் தேர்தல்கள் பழைய முறையின்படி நடத்தப்படுவது தொடர்பாக ஏற்கனவே அமைச்சரவை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்ட விதிகள் குறித்து ஆராயும் பணிகளை தேர்தல் ஆணையம் ஏற்கனவே தொடங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# எழுமாறாக எடுக்கப்படும் பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் - சுகாதார அமைச்சு

(கொழும்பு)

எழுமாறாக முன்னெடுக்கப்படும் அன்டிஜன் பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சுகாதார அமைச்சு மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

சோதனை நடவடிக்கைகளை புறக்கணிப்பதால், முழு சமூகமும் ஆபத்தை எதிர்நோக்குவதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். மக்களின் நலன் கருதியே சுகாதாரப் பிரிவினால் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் நபர்களுக்கு இன்றைய தினமும் அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கமைய, கொழும்பு - சிலாபம் பிரதான வீதியின் கொச்சிக்கடை பகுதியிலும்கொழும்பு கண்டி பிரதான வீதியின் நிட்டம்புவ பகுதியிலும் கொழும்பு இரத்தினபுரி பிரதான வீதியின் கொஸ்கம சாலாவ பகுதியிலும் கொழும்பு மாத்தறை பிரதான வீதியின் பேருவளை பகுதியிலும் இந்த பரிசோதனை நடத்தப்படுகின்றது.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 6 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## வலம்புரி 21 ஆம் ஆண்டு நிறைவு வாழ்த்துச் செய்திகள்



### "வலம்புரி நாளிதழே! வளமுடனே வாழியவே!!"


மக்கள் மனங்களில் முதலிடம் வகிக்கும் சிறப்பான நாளிதழான வலம்புரிக்கு அகவை 21. எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் மிகவும் அழகான முறையில் அச்சாகி வாசகர்களின் கரங்களை அலங்கரிக்கும் வலம்புரியானது நல்லமுறையில் நாதம் எழுப்பி எல்லோருக்கும் இங்கிதம் கலந்த மனமகிழ்ச்சியை நல்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறையருளின் ஆசிகள் வேண்டி, "வலம்புரி நாளிதழே! வளமுடனே வாழியவே!!" என்று உளமார வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

செய்திகளைச் சுடச்சுடத் தருவதில் வலம்புரிக்கு நிகர் வலம்புரியேதான்! அரசாங்கம் சம்பந்தமான முக்கியமான விடயங்களையும் மற்றும் பல்வேறு துறைசார்ந்த நிகழ்வுகளையும் அன்றாடம் மக்களைச் சென்றடைய அளப்பரிய சேவையாற்றும் வலம்புரி தனது 21 ஆவது பிறந்த நாளில் புதிய ஆண்டில் கால்பதிக்கும் சுபவேளையில் சகல விதத்திலும் துணைபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் ஆசிகூறி வாழ்த்துகின்றோம்.

ஈடிணையற்ற பேரழகுடன் வெளிவரும் எங்கள் அபிமான நாளிதழ் இன்னும் பல்வேறு சிறப்பம்சங்களுடனே மலர்ந்து மணம் வீசி வாசகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த வேண்டுமென்று நல்லைக்கந்தன் பாதம் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

"வலம்புரி" இன்றுபோல் என்றும் நன்றே திகழ்வதாக! சங்குநாதம் தொடர்ந்து முழங்கட்டும்.

**"தெய்வத்தமிழ்ச்சுடர்"**
**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**
**(ஆன்மீக எழுத்தாளரும் நல்லை ஆதீன சமயப் பிரசாரகரும்)**



### வலம்புரிக்கு நிகர் வலம்புரியே!

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகளில் வாசகர்கள் விரும்பிப் படிக்கும் ஒரே ஒரு நாளிதழ் வலம்புரி நாளிதழே! மக்கள் மனங்களில் நீங்காத இடம்பிடித்து முன்னணியில் திகழும் சிறப்புமிகு முதன்மை வாய்ந்த பத்திரிகையான வலம்புரிக்கு நிகர் வலம்புரியே!

அருமையான ஆழ்ந்த கருத்துக்கலசமாகத் திகழும் ஆசிரியர் தலையங்கங்கள் மிகவும் சிறப்பானவை. இளைஞர்களும் வயது முதிர்ந்தவர்களும் வாசிக்கக் கூடிய வகையில் தெளிவான அச்செழுத்து மூலம் விடயங்களை அழகுற அமைத்து நல்ல முறையில் வாசகர்களைச் சென்றடையும் வலம்புரி இந்த ஆண்டுமுதல் மென்மேலும் சிறந்த முறையில் வெளிவந்து வாசகர்களை மகிழ்விக்க வேண்டுமென்று உளமார வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அரசியல் விடயங்களையும் மற்றும் சமய சம்பந்தமான நிகழ்வுகளையும் சுடச்சுடத் தந்து சிறப்புடன் "திகழும் வலம்புரி நாளிதழ் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

"கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா
பத்திரிகையெல்லாம் "வலம்புரி" பத்திரிகையாகுமா?"

**காலை மணிகண்டன்**
**லயன் கௌரவ கலாநிதி கனகசபை சுந்தரலிங்கம்**
**காரைநகர் சமாதான நீதவான்களுக்கான அமைப்பின் பிரதேச சபை அமைப்பாளர்.**

### 21 ஆவது அகவை வாழ்த்துக்கள்

தினசரி வாசிப்பதால் - எம்
யுகம் எல்லாம் சுகமே...
அவ் வாசிப்புத் தளத்தை
வலம்புரி நீ வளமாக தருகின்றாய்...

இருள் சூழ்ந்து எம் வாழ்வில்
அருள் புரியவாய் செய்திகளாய்...
தனித்துவமாய் தரணியதில்
தத்துவமும் கலந்து நீ தருவாய்...

21 ஆம் நூற்றாண்டில் 21 வருடங்கள்
பத்திரிகை துறையில் நீயே அதிபதி
வருத்தமில்லா கருத்துக்களாய்
ஆசிரியர் தலைப்புக்கு நீயே தளபதி...

வலம்புரியே நீ வாழ்க வாழ்க...
வசந்தத்துடன் நீ வாழ்க வாழ்க...
வருசமெல்லாம் வளத்துடன் நீ வாழ்க..

**செல்வராசா தனுஜன், தலைவர்,**
**கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையம்.**

# அரசின் சிறந்த திட்டங்களை அரசியல் இலாபத்திற்காக விமர்சிக்கின்றனர்

## பிரதமர் கவலை



(கொழும்பு)

அரசாங்கத்தின் சிறந்த திட்டங்களை எதிர்த்தரப்பினர் அரசியல் நோக்கங்களுக்காக விமர்சிப்பது கவலைக்குரியது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எமது அரசாங்கம் ஆட்சியமைத்த ஒவ்வொரு காலத்திலும் அபிவிருத்தி நிர்மாணப் பணிகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மத்திய அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி பணிகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன. எமது ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி பணிகளை கடந்த அரசாங்கம் அரசியல் பழிவாங்கலுக்காக இடைநிறுத்தம் செய்தன. இதன் தாக்கத்தை நாட்டு மக்கள் எதிர் கொண்டார்கள்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையை தம்புள்ளை வரை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் இடை நிறுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்திகள் அனைத்தும் குறுகிய காலத்தில் நிர்மாணிக்கப்படும்.

காணி பிரச்சினை குறித்து ஆராய்ந்து காணி விவகார அமைச்சு சிறந்த திட்டங்களை வகுத்துள்ளது. காணி பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படும்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிப்பது எதிர்த் தரப்பினரது செயற்பாடாக உள்ளது. அரசாங்கம் முன்னெடுக்கும் சிறந்த திட்டங்களை எதிர்த் தரப்பினர் விமர்சிப்பது கவலைக்குரியது. (நி-4)

# பாதுகாப்பாக அடக்கம் செய்வதால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது

(கொழும்பு)

கொரோனாவால் உயிரிழக்கின்ற முஸ்லிம்களின் சரீரங்களை அவர்களது கலாசாரத்தை புறந்தள்ளி தகனம் செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றிருந்தது.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கொரோனாவால் இறக்கின்றவர்களின் சரீரத்தைப் பாதுகாப்பான முறையில் அடக்கம் செய்வதன் ஊடாக எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் முஸ்லிம்கள் தங்களது கலாசாரத்தின் அடிப்படையில் கொரோனாவால் உயிரிழந்தோரின் சரீரங்களைப் புதைப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

இதற்கு முஸ்லிம் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி விரைவான தீர்மானம் ஒன்றுக்கு வர வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அதேநேரம் அரசியல் யாப்புக்கான தங்களது பரிந்துரைகளை விரைவாக முன்வைப்பதற்கும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை விடயத்தில் தமிழ்க் கட்சிகளுக்கு இடையில் ஒரு பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் மேற்கொண்டது. (நி-4)

# மேலும் சில பகுதிகளுக்கு பயணத்தடை

(கொழும்பு)

பேருவளை மக்கொன பிரதேசத்தின் மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் 50 இற்கும் அதிகமான கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் வருண செனவிரத்ன தெரிவித்தார்.

அதன்படி, கிழக்கு மக்கொன -மேற்கு மக்கொன மற்றும் அக்கரமலை ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினுள் 361 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் மக்கொன பிரதேசத்தில் 107 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# 715 பேர் குணமடைவு

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 715 பேர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.


இதனால் இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி குணமடைந்த நோயாளர்களின் எண்ணிக்கையானது 28,267 ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை தற்போது நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் 8,229 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (நி-4)

# 250 ஏக்கரில் மரநடுகைத் திட்டம்

(ஹற்றன்)

மலைநாட்டின் 5 பிரதான நீர்வீழ்ச்சிகள் உட்பட 3 நீர்த் தேக்கங்களின் நீர்நிலைப் பாதுகாப்புக் கருதி 250 ஏக்கர் நிலப்பரப்பில் மரநடுகைத் திட்டமொன்றை சுற்றாடல் அமைச்சு ஆரம்பித்து வைத்துள்ளது.

தனியார் துறையின் ஒத்துழைப்புடன் காசல்ரி நீர்த்தேக்கத்தில் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (நி-4)



# பேதங்களை மறந்து ஒன்றுபடுங்கள்

## பிரித்தானிய தமிழர் பேரவை

**(கொழும்பு)**

**அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் வகையில் பொதுவான முன்மொழிவைச் செய்வதற்கு புலம்பெயர் அமைப்புக்களில் ஒன்றான பிரித்தானிய தமிழர் பேரவை கடுமையான பிரயத்தனங்களை செய்து வருகின்றது.**

முன்னதாக யு.எஸ்.டாக் எனப்படும் ஐக்கிய அமெரிக்க செயற்பாட்டுக்குழுவின் தலைமையில் கடந்த மாத இறுதியில் மெய்நிகர் வாயிலான ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த புலம்பெயர் அமைப்புக்களின் ஒன்றுகூடலின்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாத அமர்வில் சமர்ப்பிப்பதற்காக தயாரித்துள்ள முன்மொழிவுகளைக் கொண்ட வரைவை பகிரங்கப்படுத்திய பிரித்தானிய தமிழர் பேரவை கணிசமான புலம்பெயர் தரப்பினரின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொண்டுள்ளது.

இந்நிலையில் அந்த வரைவினை வடக்கு- கிழக்கில் உள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் செயற்படும் அரசியல் பிரதிநிதிகள், கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள், ஆகியோருக்கு பிரித்தானிய தமிழர் பேரவை அனுப்பி வைத்துள்ளது.

அத்துடன் வடக்கு- கிழக்கில் உள்ள அரசியல் பிரநிதிகள் மற்றும் கட்சிகள் குறித்த வரைவில் மேலதிகமாக இணைத்துக்கொள்ளப்பட வேண்டிய விடயங்களை முன்மொழியுமாறும் அந்த வரைவினை அடிப்படையாக வைத்து ஜெனிவா விவகாரத்தில் பேதங்களை மறந்து ஒன்றிணைந்து ஒத்துழைப்புக்களை நல்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் பிரித்தானிய தமிழ்ப் பேரவை முன்வைத்துள்ள வரைபில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

1. நீதியையும், பொறுப்புக் கூறலையும் நடைமுறைப்படுத்தும் வகையில், இலங்கையில் நடைபெற்றதாக கூறப்படும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலைகள் ஆகியவை தொடர்பாக சர்வதேச நீதிப் பொறிமுறையை முன்னெடுத்தல். அந்த நீதிப்பொறிமுறையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அல்லது சர்வதேச நீதிமன்றம் அல்லது விசேட தீர்ப்பாயம் ஆகியவற்றில் ஒன்றாக இருக்க வேண்டும்.

2. குற்றங்களை இழைத்தவர்கள் பதிலளிக்கவல்லதாக விசாரணைகளையும், வழக்குகளையும் முன்னெடுத்துச் செல்வதற்கான சுயாதீன விசாரணைப் பொறிமுறையொன்று சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக இலங்கையில் ஸ்தாபிக்கப்பட வேண்டும். அப்பொறிமுறையானது மியன்மார் விடயங்களை கையாள்வதற்காக அமைக்கப்பட்ட பொறிமுறையை ஒத்ததாகவோ அல்லது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஊடாக சிரியா விவகாரங்களை கையாள்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச பக்கச்சார்பற்ற மற்றும் சுயாதீன பொறிமுறையாக இருக்க வேண்டும் என்பது நிறைவேற்றப்படும் தீர்மானத்தில் உள்ளீர்க்கப்பட வேண்டும்.

சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள், மனித உரிமைகள் சட்டங்களை மீறியமை தொடர்பிலான ஆதாரங்களை சேகரித்தல், ஆய்வு செய் தல், ஒருங்கிணைத்தல் உள்ளிட்டவை செயற்பாடுகளை முன்னெடுத்தல்

சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப சர்வதேச நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்களில் குற்றவியல் நடவடிக்கைகளை எளிதாக்குவதற்கான கோப்புக்களை தயாரித்தல்.

கடந்த கால மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக எதிர்கால நிகழ்வுகள் குறித்த பரிந்துரைகளுடன் குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்காணிப்புச் செய்து அறிக்கை சமர்ப்பித்தல்.

3. புரையோடிப்போயிருக்கும் நீண்டகாலப் இனப்பிரச்சினைக்கு சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் மீண்டும் கடந்த கால கசப்பான நிகழ்வுகள் மீள நிகழாமையை உறுதிப்படுத்தி நிலையான சமாதானமும் ஸ்திரத்தன்மையும் ஏற்படும் வகையிலான சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்று வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

அத்துடன் தமிழர்கள் தொடர்பிலான விடயங்களை நட்பு நாடுகளுக்கு எடுத்துரைத்து அவற்றை சாதமாக்குவதோடு இலங்கைக்கு எதிரான நாடுகளின் ஆதரவினையும் சாதமாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் ஆகிய விடயங்கள் அவ் வரைவில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## அண்மைக்காலமாக அதிகரிக்கும் திருட்டுக்கள் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அறிவுறுத்தல்

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக வீடுகளை உடைத்தல், கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பண்டிகைக் காலத்தில் தங்காபரணங்கள், பணம் உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

வீதிகளில் பயணிக்கும் போது, கைப்பைகள் மற்றும் தங்காபரணங்கள் குறித்து எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வீடுகளிலிருந்து வெளியேறும் சந்தர்ப்பங்களில் பெறுமதி மிக்க பொருட்களை வீடுகளிலேயே வைத்து விட்டு செல்வதை தவிர்க்குமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டனர். (நி-4)

## உலக வங்கியிடம் 10 பில்லியன் கடனை எதிர்பார்க்கும் இலங்கை

(கொழும்பு)

கொரோனாத் தொற்று நோய்க்கு எதிரான தடுப்பூசியை வாங்க உலக வங்கியிடம் 10 பில்லியன் கடன் பெறும் முயற்சியில் இலங்கை ஈடுபட்டுள்ளதாக சிரேஷ்ட அரசாங்க அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மக்கள் தொகையில் பெரும்பகுதியினருக்குத் தேவையான தடுப்பூசிகளை வாங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிலிருந்தும் நிதியுதவியைப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகளையும் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனமான உலக சுகாதார அமைப்பு முன்னெடுத்துள்ள ஒரு சர்வதேச முயற்சியின் கீழ் இலங்கையின் மக்கள் தொகையில் 20 வீதமானோருக்கு தடுப்பூசி வழங்கப்படும் என இதுவரை உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட தடுப்பூசி இறக்குமதிகளுக்கான செலவு பெரும்பாலும் தெரிவு செய்யப்படும் தடுப்பூசி வகையைப் பொறுத்தே அமையும் என அச் செய்திக் குறிப்பில் இடம் பெற்றுள்ளது. (நி-4)


## கண்ணீர் அஞ்சலி

மலர்வு
1948 . 11 . 02

உதிர்வு
2020 . 12 . 20



### திருமதி.தியாகராஜா மங்களேஸ்வரி

நீர்வேலி நலன்புரிச்சங்கம் இலண்டன் மற்றும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி பழைய மாணவர், நலன் விரும்பிகள் சங்கம் இலண்டன்' ஆகிய அமைப்புக்களின் தலைவர் திரு.மா.திருவாசகம் அவர்களின் அன்புச் சகோதரியும் நீர்வேலி நலன்புரிச் சங்கம் லண்டன்- நீர்வேலி கிளை உறுப்பினர் திரு.தி.முத்துக்குமரன் அவர்களின் அன்புத் தாயுமாகிய **தியாகராஜா மங்களேஸ்வரி** அவர்கள் நேற்று இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அமரரின் கணவர் அமரர் தியாகராஜா அவர்கள் எமது கிளைச்சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நேற்று இறைபதம் அடைந்த அமரர் மங்களேஸ்வரியின் சகோதரர், அன்பு மகன், மருமகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார் ,உறவினர் அனைவருக்கும் எமது அமைப்புக்களின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-971)

அமரரின் பிரிவால் துயருறும்
நீர்வேலி நலன்புரிச்சங்கம் இலண்டன்
நீர்வேலி நலன்புரிச்சங்கம் இலண்டன்–நீர்வேலி கிளை

# 26 மில்லியன் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்கள் வழங்கி வைப்பு

(நல்லூர்)

யாழ்.மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட 2 ஆயிரத்து 400 குடும்பங்களுக்கு தற்போது வரை நிவாரண உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தலில் உள்ளோருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரண உதவி தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் தனிமைப்படுத்தலில் உள்ளோருக்கு அரசினால் வழங்கப்படும் கொரோனா இடர் நிவாரண உதவியின் கீழ் 26 மில்லியன் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்கள் 2400 குடும்



பங்களுக்கு நேற்று வரை வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த நிவாரணப் பணிகள் இரண்டு கட்டங்களாக ஒரு குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களின் விபரங்கள் பிரதேச செயலாளர்களால் சேகரிக்கப்பட்டு மாவட்ட செயலகத்துக்கு அனுப்பப்பட்டு மாவட்ட செயலகத்தின் ஊடாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்ட பின்னர் நிதி மூலம் பெறப்பட்டு தனிமைப்படுத்தலில் உள்ளோருக்கு நிவாரண உதவிகள் கட்டம் கட்டமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் தற்போதைய நிலையில் ஆயிரத்து 670 குடும்பங்கள் யாழ்.மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்படுதலில் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-4-33)



**கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய மாபெரும் இரத்ததான முகாம் நேற்று ஞாயிற்றுக் கிழமை கோண்டாவில் குட்டிச்சுட்டி முன்பள்ளியில் இடம்பெற்றது. குறித்த இரத்ததான முகாம் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் அனுசரணையில் நடைபெற்றது.**

**(படம்: ரவிசாந்)**

# யாழ்.மாநகர சுகாதார தொழிலாளர்களினால் துப்புரவு செய்யப்படும் கால்வாய்கள்





(நல்லூர்)

யாழ்ப்பாணம் மாநகரில் கழிவுநீர் வாய்க்கால்கள் சுகாதாரத் தொழிலாளிகளினால் துப்புரவு செய்யப்படுகின்றன.

யாழ்.மாநகரின் வைத்திய சாலை வீதியில் கால்வாய் துப்புரவு நடவடிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கழிவுநீர் வாய்க்காலுக்குள் பிளாஸ்ரிக் கழிவுகள் தேங்கிக் கிடப்பதனால் நீர் வழிந்தோடும் செயற்பாடு பாதிக்கப்பட்டது.

இதனால் வெள்ள நீர் வழிந்தோடுவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையிலேயே யாழ்.மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளிகளினால் கழிவு நீர் வாய்க்கால்கள் துப்புரவு செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. (5-4-33)

## திருவெம்பாவை இன்று ஆரம்பம்

(குப்பிழான்)

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்தத் திருவெம்பாவை உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

திருவெம்பாவை உற்சவ நாட்களில் தினமும் அதிகாலை 4 மணியளவில் திருப்பள்ளியெழுச்சியுடன் பூசைகள் ஆரம்பமாகும்.

திருவெம்பாவை உற்சவத்தின் இறுதி நாளாகிய எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 3 மணியளவில் சிதம்பர நடராஜப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து திருப்பொன் ஊஞ்சலும் சுவாமி வீதி உலா வருதலும் இடம்பெறவுள்ளது. (5-4-18)

# அமைச்சரின் உறுதிமொழியை அடுத்து போராட்டத்தை கைவிட்ட மீனவர்கள்

(முல்லைத்தீவு)

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தக்கோரி முல்லைத்தீவு செயலகத்தின் முன் கடந்த ஆறு நாட்களாக தொடர் போராட்டம் நடத்திவரும் மீனவர்களின் போராட்டம் மீண்டும் அமைச்சின் உறுதிமொழியை அடுத்து நேற்று கைவிடப்பட்டது.


முல்லைத்தீவு மாவட்டத்தில் அத்துமீறும் இந்திய இழுவைப் படகுகளினுடைய அட்டகாசங்கள் மற்றும் சட்டவிரோத தொழில்கள், தென்பகுதி மீனவர்களின் வருகை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் இவற்றில் இருந்து விடுபடும் முகமாக தொடர் கவனயீர்ப்பு போராட்டமொன்றை கடந்த 15 ஆம் திகதி முதல் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், முல்லைத்தீவு மாவட்ட கடற்படைத் தளபதி முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் நேரடியாக போராட்டக் களத்திற்கு வருகை தந்து இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய செயற்பாடுகள் மற்றும் சட்டவிரோத தொழில்கள் போன்றவற்றிற்கு தீர்க்கமான முடிவுகளை தந்தாலே தமது போராட்டத்தைக் கைவிடுவோம் எனத் தெரிவித்து தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் நேற்றுச் சம்பவ இடத்திற்கு வருகை தந்த கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய காதர் மஸ்தான், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் அதிகாரிகளிடம் தங்களுடைய பாதிப்புக்கள் தொடர்பில் தெளிவாக எடுத்துரைத்ததாகவும் இது தொடர்பில் தன் மீது நம்பிக்கை கொள்ளுமாறும் தான் குறித்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட மக்களினுடைய தீர்வை நோக்கிய நடவடிக்கைக்கு ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டவர்கள் பூரண ஆதரவு வழங்குவதாகவும் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் தெரிவித்ததாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.



கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சரின் வேண்டுகோளை ஏற்று மீன்பிடி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி அவருடைய கருத்துக்கு மதிப்பளித்து அவர்கள் மீது நம்பிக்கை வைத்து தங்களுடைய போராட்டத்தை இடைநிறுத்துவதாகவும் எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெறுமெனில் தாம் மீண்டும் போராட்டத்தில் குதிக்க நேரிடும் எனவும் தெரிவித்துள்ளனர். (5-4-281)

# கொரோனாவை ஒழிக்க சிறிது காலமாகும்- கமால்



(கொழும்பு)

நாட்டிலிருந்து கொரோனாவை இல்லாதொழிக்க சிறிது காலமாகலாம் என பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

பொதுமக்களை சுகாதார வழிகாட்டுதல்களை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ள அவர், நோய் தொடர்பான தகவல்களை மறைக்க வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமூக நிகழ்வுகளில் ஒன்றுகூடுவதை பொதுமக்கள் தவிர்க்கவேண்டும் எனவும் வீடுகளில் இருக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொதுமக்கள், முதியவர்கள் மற்றும் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும் எனவும் பாதுகாப்பு செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதியும் அரசாங்கமும் முப்படையினரும் சுகாதார அதிகாரிகளும் நாட்டிலிருந்து கொரோனாவை ஒழிப்பதற்கான அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

கொரோனாவினால் பாதிக்கப்பட்ட பகுதியை அடையாளம் கண்டபின்னர் சுகாதார அதிகாரிகளும் புலனாய்வுப் பிரிவினரும் நோய் எவ்வாறு பரவுகின்றது என்பதை கண்டுபிடித்து அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றனர் எனவும் அதன் பின்னர் அந்த பகுதியை முடக்குவதற்கு அல்லது தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுகின்றது என தெரிவித்துள்ளார். (நி-4)

## வைர நட்சத்திர தின வாழ்த்து

Congratulations



திருமதி
சயந்தி
கருணாகரன்

நாவலர் வீதி யாழ்.நகரில்
மாண்புறு அதிபர் "பொன்னம்பலம்"
நல்லாசிரியை "இராசம்மா" தம்பதியினரின்
நான்காவது புத்திரி **சயந்தியின்**
வைர நட்சத்திர தினம் இன்று...

யாழ். வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில்
பாடம் கற்று விஞ்ஞான ஆசிரியையாக
மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் நியமனம் பெற்று
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விஷேட
விஞ்ஞான ஆசிரியையாகப் பட்டம் பெற்றார்

இல்லறம் எனும் நல்லற வாழ்வில்
மூளாயூர் பொருளியல் பேராசான்
"கருணாகரனை" கைத்தலம் பற்றி
ஆசைக்கு "அனிதா" ஆஸ்திக்கு "கோபிகாந்" எனும்
இரு பிள்ளைகள் அவனியிலே தவழ்ந்து
பொறியியலாளர் அனிதா திருமண பந்தத்திலே
பொறியியலாளர் "கௌசிகனுடன்" இணைய
பொறியியல் மாணவனானார் கோபிகாந்.

ஆசிரியப் பணியிலே யாழ்.
கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை
யாழ்.சென்றோக்ஸ் வித்தியாலயம்
யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி
யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்
யாழ். மத்திய கல்லூரி என நிறைவாக
சிறப்புறச் சேவையாற்றி ஓய்வு
நிலை பெறுகின்ற வேளையிலே - சயந்தி

சீருடனும் சிறப்புடனும் மங்களமாய்
இனிதே நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

(5002)

மூளாய் அன்புடன் புகுந்த வீட்டார்

## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

மு/கைவேலி கணேச வித்தியாலயம்





2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல்,
100 புள்ளிகளுக்கு மேல், 70 புள்ளிகளுக்கு
மேல் பெற்ற மாணவர்களை பாராட்டு
வதுடன் அவர்களை வழிப்படுத்திய
அதிபர் செல்வி இரத்தினம்
பேரின்பராணி, ஆசிரியர்கள் திருமதி
சிவநந்தினி விஜயகுமார், திருமதி குயின்ரின்
சுறாஜ் ஆகியோரை உளமாரப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

மோ.திர்சாள்
169

பாடசாலைச்சமூகம்
மு/கைவேலி கணேச வித்தியாலயம்

## 70 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

Happy Birthday

### திரு.கந்தசாமி ஆனந்தராசா

(ஓய்வு பெற்ற தபால் தரம் பிரிப்பாளர், பருத்தித்துறை)



ஆண்டு எழுபதிலே அடியெடுத்து வைத்தாய்
நீ ஆனைமுகன் அருளால் அகமகிழ்ந்து
வாழி–இல்லறத்தில் நல்லறங்கள் இனிய
பல புரிந்தாய் எல்லோரும் மதித்திடவே
இன்பமுடன் வாழி - மனைவி, மக்கள்,
சுற்றத்தார் , உடன் பிறந்தார் எல்லாம் மனம்
மகிழ இந் நாளில் மகிழ்வுடனே
வாழி - எல்லாம் அவன் செயலே
என்றெண்ணும் நீயும் இன்னும்
பல ஆண்டு வாழி! வாழி!

(C-963)

அன்புடன் வாழ்த்தும்
உன் உறவுகள்
நாகர் கோவில் வடக்கு, பருத்தித்துறை.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# பொறுப்பற்றவர்களின் செயற்பாடுகள் அச்சத்தின் மத்தியில் பொதுமக்கள்

(நெளுக்குளம்)

வவுனியாவில் இனம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பினை பேணியவர்கள் என்ற காரணத்தினால் 50 மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் அவர்கள் அறிவுறுத்தல்களை மீறி வீதியில் நடமாடித்திரிகின்ற அவலம் நடந்தேறி வருகிறது.

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட கைதியொருவர் மற்றும் திருநாவற்குளம் பகுதியில் வசிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர், அவரது குடும்பத்தினர் ,கற்குழியில் வசிக்கும் மாணவி என 8 பேர் வரையில் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த கொரோனா தொற்றாளர்களுடன் நெருங்கி பழகியவர்கள் என வவுனியாவில் பலர் குடும்பத்துடன் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை தனிமைப்படுத்தும் சட்டத்தின் பிரகாரம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட பலரும் சமூக நலன் கருதாது வீதியில் நடமாடித்திரிவதால் ஏனையவர்கள் அச்சத்துடன் நடமாட வேண்டிய நிலையில் உள்ளனர் எனவே அவர்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என அச்சத்திலுள்ள மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (5-4-299)

# வயல் விழாவில் பங்கேற்ற வடமாகாண ஆளுநர்




(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நேற்று வயல் விழா மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை பகுதி திறப்பு விழா என்பன இடம் பெற்றன.

முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பூ.உகநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் வடமாகாண ஆளுநர் திருமதி.பி .எஸ். எம் சாள்ஸ் கலந்து கொண்டார்.

நிலையத்தின் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் மற்றும் விற்பனை பகுதிகள் உள்ளிட்டவற்றை பார்வையிட்ட ஆளுநர் விவசாயிகளுக்கு விதை தானியங்களையும் வழங்கி வைத்தார். இதில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாயத் திணைக்கள பணிப்பாளர், விவசாய அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (5-281)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் காஞ்சிபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

கிளிநொச்சி மது ஒழிப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று சட்டவிரோத மது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார் என கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பொறுப்பதிகாரி D.M சதுரங்க தெரிவித்தார். (5-4-299)

# சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம் தொடர்பான கலந்துரையாடல்

(பனிக்கன்குளம்)

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் உலக வங்கியின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம் தொடர்பான கலந்துரையாடலானது மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கால நிலைக்கு ஏற்றவகையில் விவசாய நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதனை நோக்காகக் கொண்ட குறித்த திட்டமானது முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான், துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் மாவட்டத்தில் மண்டைக்கல் ஆறுடன் இணைந்ததாக 06குளங்களும் மற்றும் பேராறினை உள்ளடக்கியதாக 97குளங்களுமாக 103 குளங்கள் இத் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் குறித்த திட்டத்தின் கடந்தகால முன்னேற்றங்கள் தொடர்பாக வேலைத் திட்டங்களுக்குரிய திணைக்கள அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், திட்டத்திற்குரிய மாகாண பிரதிப்பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், திட்ட மிடல் பணிப் பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், பிரதேச செயலாளர்கள், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், உதவிப்பிரதேச செயலாளர்கள், வனஜீவராசிகள், கால் நடை அபிவிருத்தி, தொல்பொருள், விவசாய திணைக்களங்களின் உதவிப்பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (5-4-281)


# மூடப்பட்ட பாடசாலைகள் இன்று முதல் செயற்படும்

(நெளுக்குளம்)

வவுனியாவில் கொரோனா தொற்றுடன் மாணவர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் தற்காலிகமாக மூடப்பட்ட பாடசாலைகள் நாளை முதல் மீண்டும் செயற்படும் என வலய கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கமைவாக வவுனியா தெற்கு வலயக் கல்வி திணைக்களத்திற்குட்பட்ட 5 பாடசாலைகளும் மூடப்பட்டிருந்தது.


இந்நிலையில் மீண்டும் சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பிரகாரம் இன்று 21 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் திறந்து கல்விச்செயற்பாடுகள் முன்னெடுக்கபடும் எனத் தெரிவித்தார். (5-4-299)



பனை எழுச்சி வாரத்தினை முன்னிட்டு தாலம் சஞ்சிகை வெளியீடு மற்றும் சிறந்த அங்கத்தவர்கள் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக வளாகத்தில் இடம்பெற்றது.இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், வடமாகாண மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங்கம், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான பொ.வாகீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்-தவசீலன்)

# உள்ளூர் துப்பாக்கியுடன் மூவர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் சட்டவிரோதமான முறையில் உள்ளூர் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 2 துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(5-4-316)

# இராசிபலன்

21.12.2020
மார்கழி 06,திங்கட்கிழமை
சப்தமி முன்னிரவு 7.47 மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 2.34 மணிவரை
சுபநேரம் 12.24-1.54 மணிவரை
இராகுகாலம் 7.54-9.24 மணிவரை
சந்திராஷ்டமம்: மகம்
திருவெம்பாவை பூசை ஆரம்பம் வளவன்


மேஷம்

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள்.


மிதுனம்

கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்,உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியக்க வைப்பார் கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.


கடகம்

உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களைவிட்டு விலகலாம்,வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்.


சிம்மம்

சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்,கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை எளிதில் நிறைவேற்றுவீர்கள் வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கன்னி

எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும் வாய்ப்புண்டு,வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


துலாம்

வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், புதிய முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.


விருச்சிகம்

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள், எடுத்த காரியங்கள் நிறைவேற அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


தனுசு

உடன் பிறப்புக்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வர்,அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.


மகரம்

பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.


கும்பம்

உறவினர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம்,உடல்நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.


மீனம்

வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், உறவினர்களின் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, மனச் சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும் நாள்,முயற்சியில் சிறு தாமதம் ஏற்படலாம்.

வாய்ச்சொல்லை விட செயலின் குரலே உரக்க ஒலிக்கும்

# தொற்று அபாயமுள்ள பகுதிகளில் இருந்து வெளியிடங்களுக்கு செல்லாதீர்கள்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை

**(கொழும்பு)**

**கொரோனா தொற்று அபாயம் கூடுதலாகவுள்ள பகுதியில் உள்ள மக்கள் பண்டிகை காலப்பகுதியில் வெளியிடங்களுக்கு செல்வதை முடிந்தவரையில் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று பதில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன் தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தற்போது மேல் மாகாணத்தில் கொரோனா தொற்று ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. இதேவேளை வெளி மாவட்டங்களில் கொரோனா தொற்று பரவல் ஆரம்பித்திருக்கின்றமையையும் அவதானிக்கக் கூடியதாக இருப்பதாக உள்ளது.



தொற்றுள்ள அனர்த்த பிரதேசத்தில் இருந்து வெளியிடங்களுக்கு செல்வதாயின், அதாவது அத்தியாவசிய தேவை இருக்குமாயின் மாத்திரம் வெளியே செல்லுமாறு நாம் பொது மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

முடிந்த வரையில் தாம் குடியிருக்கும் பகுதியிலேயே தங்கியிருக்குமாறு நாம் பொது மக்களை கேட்டுக்கொள்கின்றோம். தற்போது கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் தொற்று ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. வெளியிடங்களில் ஓரளவுக்கு பரவல் அதிகரித்துள் ளமையை காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு காரணம் இந்த அனர்த்த பகுதியில் இருந்து வெளியிடங்களுக்கு மக்கள் செல்வது அல்லது அந்த பிரதேசங்களில் உள்ள மக்கள் இந்த அனர்த்த பிரதேசங்களுக்கு வருகின்றமையாகும்.

இதனால் யாருக்காவது தொற்றுக்கான அறிகுறிகள் காணப்பட்டால் அது தொடர்பில் வைத்தியரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள வேண்டும். வைத்தியரின் ஆலோசனைக்கு அமைய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டால் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் நாம் கேட்டுக்கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

# மூன்று வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்கள் அடுத்த வருடம் நாட்டிற்கு கிடைக்கும்

(கொழும்பு)

புதிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் மூன்று வெளிநாட்டு முதலீடு திட்டங்கள் அடுத்த வருடம் நாட்டிற்குக் கிடைக்கும் என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று நிகழ்ச்சித் திட்டங்களும் பாரிய அளவிலான வேலைத்திட்டங்களாகும். இதன் மூலம் 550 பில்லியன் ரூபா இலங்கைக்கு கிடைக்கும்.

அடுத்த வருடத்தில் கிடைக்கும் முழு வெளிநாட்டு முதலீடுகளின் பிரகாரம் நாட்டில் சுமார் ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

துறைமுக நகரில் சர்வதேச மாநாட்டு மண்டபம், அம்பாந்தோட்டை தொழிற் பேட்டையின் றபர் உற்பத்தி தொழிற்சாலை மற்றும் மருந்து உற்பத்தி நிலையம் என்பன இந்த மூன்று நிகழ்ச்சித் திட்டங்களாகும். (நி-4)

# போதைப்பொருள் கும்பலிடம் இருந்து ஆறு கோடி பணம் மீட்பு

(கொழும்பு)

பொலிஸ் போதைப்பொருள் பணியகம் நேற்றிரவு மேற்கொண்ட விசேட போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையின்போது போதைப் பொருட்கள் விற்பனை மூலம் சம்பாதித்ததாகக் கருதப்படும் சுமார் 6 கோடி ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.



**இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட 3 சந்தேக நபர்களிடம் இருந்து 300 கிராம் ஹெராயின் மீட்கப்பட்டது.** சந்தேக நபர்களில் ஒருவரிடம் இருந்த 5 கோடி 90 இலட்சத்து 51 ஆயிரத்து 821 ரூபா ரொக்கப் பணம் கைப்பற்றப்பட்டது.

இந்தப் பணம் போதைப் பொருள் கடத்தல் மூலம் சம்பாதிக்கப்பட்டது என நம்பப்படுவதாக அஜித் ரோஹன கூறினார்.

கடுவலை, மலபே மற்றும் வெலிவிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ஜோபிடனுடன் இணைந்து செயற்படத் தயார்-சீனா அறிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவுடனான வேறுபாடுகளைக் களைந்துவிட்டு ஜோபிடன் நிர்வாகத்துடன் இணைந்து செயற்படத்தயாராக உள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

ஜோபிடன் பதவியேற்ற பிறகு இருநாடுகளுக்கிடையிலான உறவு வலுப்பெறுமென எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில், பீஜிங்கில் பேசிய சீன வெளியுறவு அமைச்சர் இதனை உறுதிப்படுத்தினார்.

இரு நாடுகளுக்கான பொது நலன்களை மறந்துவிட்டுச் சீனாவை அமெரிக்கா கடுமையாக விமர்சித்ததால் உறவு மோசமடைந்ததாகக் குறிப்பிட்டார்.

கொரோனா, பொருளாதார மீட்சி, பருவநிலை மாற்றம், இனச் சமத்துவம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப் போவதாக ஜோபிடன் கூறியதை சுட்டிக்காட்டினார்.

சீனா மற்றும் அமெரிக்கா நாடுகளுக்கிடையில் வர்த்தக போர், கொரோனா விவகாரம் என பல விடயங்களில் மோதல் ஏற்பட்டது.

தேர்தலுக்கு முன்னதாக சீனா நடந்து கொள்ளும் விதத்தை பொறுத்தே அந்த நாட்டை தண்டிக்க தான் விரும்புகிறேன் என ஜோபிடன் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கொரோனா தடுப்பூசி போலி இணையத்தளங்கள் முடக்கம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கொரோனா தடுப்பூசி விநியோகிக்கும் பயோடெக் நிறுவனத்துக்கு சொந்தமானது போல செயற்பட்டு வந்த போலி இணையத்தளங்களை அமெரிக்க அதிகாரிகள் முடக்கினர்.

இது குறித்து விசாரணை நடத்திய போது, முடக்கப்பட்ட இணையத்தளங்களில் ஒன்று, கோலாலம்பூரில் உள்ள ஒரு நிறுவனத்தின் மூலம் கடந்த 8 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டது எனவும், அது பற்றிய தனிப்பட்ட விபரங்கள் எதுவும் இல்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது. இதைப்போல மற்றொரு இணையத்தளம் நைஜீரியாவைச் சேர்ந்த ஒரு தனிநபரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதும் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவில் தடுப்பூசி போடும் பணிகள் தொடங்கியிருக்கும் நிலையில், மக்கள் இதுபோன்ற இணையத்தளங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-4)

# இஸ்ரேலில் முதலாவது தடுப்பூசி போட்டுக்கொண்டார் நெதன்யாகு



(ஜெருசலேம்)

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நாட்டில் முதலாவது நபராக கொரோனா தடுப்பூசியை பெற்றுள்ளார்.

பைசர் மற்றும் பயோஎன்டெக் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட குறித்த தடுப்பூசி பெற்றபோது, நெதன்யாகு இஸ்ரேலின் தடுப்பூசி பிரசாரத்தை நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

சுமார் 9 மில்லியன் சனத்தொகை கொண்ட இஸ்ரேலில் 3 இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

இந்த மாத தொடக்கத்தில் இருந்து நாளாந்தம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொரோனா தொற்று நோயாளிகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# விமானத்தில் சென்ற பயணி கொரோனா அறிகுறியுடன் உயிரிழப்பு

## சக பயணிகள் கொந்தளிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நடுவானில் பறந்த விமானத்தில் கொரோனா அறிகுறியுடன் பயணி ஒருவர் இறந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

அமெரிக்காவின் ஆர்லாண்டோ நகரில் இருந்து லொஸ் ஏஞ்சல்சுக்கு பயணிகள் விமான ஒன்று புறப்பட்டு சென்றது. அதில் பயணம் செய்த ஆண் பயணி ஒருவருக்கு திடீரென உடல் நிலை மோசமானது.

உடனடியாக விமானம் நியூ ஆர்லியன்சில் தரை இறக்கப்பட்டது. மருத்துவர்கள் பரிசோதித்தபோது அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

அப்போது இறந்தவருடன் வந்திருந்த அவரது மனைவி, 'கடந்த ஒரு வாரமாகவே கணவருக்கு கொரோனா அறிகுறிகள் இருந்தது' என்று சக பயணிகளிடம் தெரிவித்தார்.

இதனைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த சக பயணிகள் கொந்தளித்தனர். கொரோனா தொற்று அறிகுறி உள்ள ஒருவரை பயணம் செய்ய எப்படி விமான நிறுவனம் அனுமதித்தது என்று ஊழியர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து விமான நிறுவனம் கூறும்போது, 'இறந்த நபர்பயணத்துக்கு முன்பு விமான நிலையத்தில் நிரப்பிய படிவத்தில் தனக்கு கொரோனா இருப்பதாகவோ, அறிகுறிகள் உள்ளதாகவோ தெரிவிக்கவில்லை என்று தெரிவித்துள்ளது.

ஆனால் பயணம் செய்யும் முன்பு பயணியின் உடல்வெப்ப நிலையை ஊழியர்கள் சரியாக பரிசோதிக்கவில்லை என்று மற்ற பயணிகள் குற்றம்சாட்டி உள்ளனர்.

இதைத்தொடர்ந்து அந்த விமானத்தில் பயணம் செய்த 179 பயணிகளை தொடர்பு கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. விமான ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (நி-4)

# வென்டிலேற்றர் வெடித்து 9 கொரோனா நோயாளிகள் பலி

## துருக்கியில் துயரம்



(அங்காரா)

துருக்கி வைத்தியசாலை ஒன்றில் ஒட்சிசன் வென்டிலேட்டர் வெடித்து நோயாளர் விடுதி தீப்பற்றி எரிந்ததில் அங்கு அனுமதிக்கப்பட்டிருந்த 9 கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் உயிரிழந்தனர்.

துருக்கியின் தென் பகுதியில் காஜியான்டெப் என்ற இடத்தில் சாங்கோ பல்கலைக்கழக வைத்தியசாலையிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

ஒட்சிசன் வென்டிலேட்டர் வெடித்து விடுதியில் இருந்தவர்களில் 8 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். ஒருவர் படுகாயங்களுடன் வேறொரு வைத்தியசாலைக்கு மாற்றப்படும் வழியில் இறந்ததாக துருக்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். துருக்கியில் இதுவரை சுமார் 20 இலட்சம் பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (நி-4)

# ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள்



(சனா)

உள்நாட்டுப்போர் நடந்து வரும் நிலையில் ஏமனில் இரட்டை ஆண் குழந்தைகள் ஒட்டிப்பிறந்துள்ளன.

ஏமன் நாட்டில் அரச படைகளுக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்கள் படைகளுக்கும்இடையே கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி தொடங்கி உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது.

தலைநகர் சனா, ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பிடியில் உள்ளது. அங்குள்ள விமான நிலையம் பெரும் சேதம் அடைந்து மூடப்பட்டுள்ளது. இந் நிலையில் அங்கு இரட்டைக் குழந்தைகள் ஒட்டிப் பிறந்துள்ளன.

"ஒட்டிப்பிறந்துள்ள இந்த இரட்டைக்குழந்தைகள்ஒவ்வொருவருக்கும் தனித்தனியே இதயம் இருப்பதை 'எக்கோகார்டியோகிராம்' பரிசோதனை காட்டுகிறது.

ஆனால் அவர்களில் ஒருவருடைய இதயம் சாதாரணமானது அல்ல. இவர்களுக்கு எந்தெந்த உறுப்புகள் இணைந்துள்ளன என்பதை துல்லியமாக தீர்மானிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்கள் வைத்தியசாலையில் இல்லை" என வைத்தியசாலை இயக்குநர் குறிப்பிட்டார்.

இந்த குழந்தைகளை வெளிநாட்டுக்கு கொண்டு சென்று அறுவைச் சிகிச்சை மூலம் பிரித்துக் காப்பாற்ற வேண்டும் என்ற குரல் அங்கு வலுத்து வருகிறது. (நி-4)

# ஒரு கோடியைக் கடந்தது இந்தியாவில் தொற்று

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியை கடந்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட தகவலின்படி, 'இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியை கடந்துள்ளது. இதற்கமைய மொத்த பாதிப்பு 10,004,599 ஆக உள்ளது. (நி-4)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2020-15.01.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## வருமானம் திருப்தி தரும்



சார்வரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன் தன ஸ்தானத்தில் சஞ்சரித்து அஷ்டம ஸ்தானத்தைப் பார்க்கின்றார். சுக்கிரனோடு கேதுவும், 8 இல் ராகுவும் அமர்ந்து சர்ப்ப தோஷ அமைப்பில் இருக்கின்றார்கள்.

அதேசமயம் சகாய ஸ்தானத்திற்கு அதிபதியான குருவும், சுக ஸ்தானத்திற்கு அதிபதியான சனியும் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கின்றார்கள். எனவே உடன்பிறப்புகளின் ஒத்துழைப்போடு உன்னத நிலையைக் காண்பீர்கள். வருமானம் திருப்தி தரும்.

**ராகு-கேதுக்களின் ஆதிக்கம்**

2 இல் கேது இருப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லும். அஷ்டமத்தில் ராகு இருப்பதால் ஏற்றமும், இறக்கமும் வந்துகொண்டே இருக்கும்.

சேமிப்புகள் கரையும். அதற்காக கவலைப்படாமல் அதை ஈடுகட்டும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் முதலீடு செய்யும் முன்பு யோசித்துச் செய்வது நல்லது. பிறரிடம் கருத்துக்கள் தெரிவிக்கும் பொழுது சொற்களில் கவனம் தேவை.

**மகரச் சனி சஞ்சாரம்**

இதுவரை உங்கள் இராசிக்கு மூன்றாமிடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், டிசெம்பர் 26 ஆம் திகதி நான்காமிடத்திற்கு செல்கின்றார். எனவே இனி அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் தொடங்குகின்றது.

ஆகையால் மிகமிக கவனம் தேவை. தொழிலில் எவ்வளவு பணம் வந்தாலும் சேமிக்க இயலாது. அரசாங்கக் கெடுபிடிகளும் இருக்கலாம். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகைகளால் பிரச்சினைகள் உருவாகலாம். குருவுடன் சனி இணைந்திருப்பதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது என்றாலும், மனநிம்மதி குறையத்தான் செய்யும். சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபடுவதோடு, சிறப்பு தலங்களுக்கும் சென்று வழிபட்டு வருவது நல்லது.




**மகர புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் டிசெம்பர் 30 ஆம் திகதி மகர இராசிக்கு செல்கின்றார். 4 ஆம் இடத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படும். பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் வீண் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு அதனால் வேலையில் இருந்து விலகலாமா? என்று சிந்திக்க நேரிடும். பொதுவாக இக்காலத்தில் கவனமுடன் இருப்பது நல்லது.

**தனுசு சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், 8 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் சுக்கிரன். ஜனவரி 5 ஆம் திகதி 3 ஆம் இடமான தனுசு இராசிக்குச் செல்கின்றார். இராசிநாதன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொட்டது துலங்கும். தொகை வரவு திருப்தி தரும். வெற்றிச் செய்திகள் இல்லம் தேடி வரும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு உறுதுணையாக இருக்கும். கடன் சுமையில் இருந்து விடுபட வாய்ப்புகள் கைகூடி வரும். கடிதப் போக்குவரத்தால் நன்மைகள் உண்டு. பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும்.

இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் துர்க்கையை வழிபட்டு வருவது நல்லது.

## குடும்ப முன்னேற்றம் கூடும்



சார்வரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியில் சுக்கிரனும், கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். 7 இல் ராகுவும், 6 இல் சொந்த வீட்டில் ராசிநாதன் செவ்வாயும் சஞ்சரிக்கின்றார்கள்.

தன ஸ்தானத்தில் குரு-சனி பரிவர்த்தனை யோகம் பெற்றிருப்பதால் பொருளாதார நிலை உயரும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். குடும்ப முன்னேற்றம் கூடும்.

**ராகு-கேதுக்களின் ஆதிக்கம்**

மாதத் தொடக்கத்தில் ரிஷப இராசியில் ராகுவும், ஜென்ம இராசியில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். எனவே சர்ப்பக் கிரகத்தின் ஆதிக்கத்தில் இருக்கிறீர்கள். இருப்பினும் ஞானகாரகன் கேது ஜென்மத்தில் இருப்பதால் அறிவாற்றல் பளிச்சிடும். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வெளிநாட்டிலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். குரு பார்வை சப்தம ஸ்தானத்திலுள்ள ராகு மீது பதிவதால் தம்பதியர்களுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். புகழ்மிக்கவர்களின் ஒத்துழைப்போடு பொருளாதார விருத்தியை அதிகரித்துக்கொள்ள முன்வருவீர்கள்.

**மகரச் சனி சஞ்சாரம்**

உங்கள் இராசிப்படி ஏழரைச் சனியின் ஆதிக்கம் இதுவரை நடைபெற்று வந்தது. டிசெம்பர் 26 ஆம் திகதி சனி விலகுகிறது. எனவே இனி நல்ல நேரம் தொடங்குகின்றது. நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல தகவல் இப்பொழுது கிடைக்கும். தொழில் முன்னேற்றம் உண்டு. பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். இடமாற்றம், ஊர்மாற்றம், உத்தியோக மாற்றங்கள் கூட ஒரு சிலருக்கு வரலாம். வரும் மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமையும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உண்டு. திருமண வாய்ப்பு கைகூடி வரும். எதிர்பார்த்த பதவி உயர்வும், செய்தொழிலில் கூடுதல் இலாபமும் கிடைக்கும்.

**மகர புதன் சஞ்சாரம்**




உங்கள் இராசிக்கு அஷ்டமாலாபாதிபதியாக விளங்குபவர் புதன். அவர் டிசெம்பர் 30 ஆம் திகதி மகர இராசிக்கு செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3 ஆம் இடமான சகாய ஸ்தானத்திற்கு லாபாதிபதியான புதன் செல்லும் இந்த நேரம் எதிர்பாராத வரவுகள் உண்டு. வியாபாரத்தை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பூர்வீகச் சொத்துக்களால் இலாபம் கிடைக்கும் தெய்வ நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் கூடும்.

**தனுசு சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஜனவரி 5 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கின்றார். விரயாதிபதி சுக்கிரன் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் விரயத்திற்கு ஏற்ற தனம் வந்து கொண்டே இருக்கும்.

எந்தக் காரியத்தையும், கையில் பணத்தை வைத்துக்கொண்டு செய்ய வேண்டிய `நிர்ப்பந்தம் ஏற்படாது. காரியத்தை தொடங்கிவிட்டால் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகளும் நடைபெறும்.

இம்மாதம் விநாயகப்பெருமான் வழிபாடும், அனுமன் வழிபாடும் வெற்றியை வழங்கும்.

(தொடரும்)

# மலையகத்தில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்க நடவடிக்கை

## விமர்சித்தவர்கள் வாய்மூடி மௌனம்



(கொழும்பு)

மலையக பல்கலைக்கழகத்திற்கான இடமும் அதற்கு தேவையான பணமும் ஒதுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொட்டகலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "இவ்வாறான நிலையில் பல்கலைக்கழகம் வரவில்லை என விமர்சித்தவர்கள் தற்போது வாய்மூடி மௌனம் காக்கின்றனர்.

கொட்டகலை கடந்த 4 வருடங்களாக மறக்கப்பட்டிருந்தது. அபிவிருத்திகளை மேற்கொண்டால் அதன் பெயர் தொண்டமானுக்கு சென்றுவிடும் என்ற அச்சமே இதற்கு காரணம்.

மலையக பல்கலைக்கழகத்திற்கான இடமும் அதற்கு தேவையான பணமும் ஒதுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் வரவில்லை என விமர்சித்தவர்கள் ஏன் இப்போது வாழ்த்த மறுக்கின்றனர்.

தற்போது மலையகத்தில் வீட்டுத் திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நான் அமைச்சை பொறுப்பேற்கும் போது கொவிட் நிலைமை இலங்கையிலும், உலகத்திலும் பாரிய அச்சுறுத்தலாக காணப்பட்டது.

இவ்வாறான நிலைமையில் மக்கள் மிகுந்த பொறுமையுடன் உள்ளனர். இவ்வாறான நிலையிலும் அரச இயந்திரம் இயங்குகின்றது. கொரோனாவின் அச்சுறுத்தல் மலையகத்தை பாதித்துள்ளது. ஆயிரம் ரூபாய் தொடர்பிலேயே பேசுகின்றனர்.

தொழிலாளர்களின் ஏனைய பிரச்சினைகள் காணாமல் போயுள்ளன. தோட்டத் தொழில் கௌரவமற்றது என நினைப்பது தவறு. மாறாக அதைச் செய்விக்கின்ற முறைமையே தவறானது.

தோட்டத் தொழில்துறையை நவீனமயப்படுத்தி கௌரவித்தால் அந்தத் துறையை பாதுகாக்க முடியும். மலையக கல்வித் தரம் வீழ்ச்சிக்கு வழங்கள் இல்லாமையே பிரதான பிரச்சினை.

சுகாதார வழிமுறைகளை முறையாக கைக்கொள்வதன் மூலமே கொவிட் தொற்றை மலையகத்திலிருந்து ஒழிக்க முடியும்' எனத் தெரிவித்துள்ளார். (நி-4)

# இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்ட பின்னர் முதன் முறையாக இலங்கைக்கு வருகை தர ரஷ்ய சுற்றுலா குழுவுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சிவில் விமான போக்குவரத்து ஆணையத்தின் தலைவர் உபுல் தர்மதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி 200 க்கும் மேற்பட்ட ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் அடங்கிய குழு கட்டுநாயக்க மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையங்களுக்கு வருகை தரவுள்ளது.

இதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விமான நிலைய அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், பயண முகவர்களுக்கும் தேவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, விமான நிலையத்தில் கிருமி நீக்கம், சுங்க மற்றும் குடிவரவு நடவடிக்கைகள், அத்துடன் சுற்றுலா பயணிகளுக்கு ஹோட்டல்களை முன்பதிவு செய்தல் மற்றும் சுற்றுலாப்பயணத்திற்கு பேருந்துகளை ஏற்பாடு செய்வது குறித்து அவர்கள் கவனம் செலுத்தியுள்ளதாக உபுல் தர்மதாஸ தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் 26ஆம் திகதி முதல் நாடு திரும்ப முடியாத இலங்கையர்கள் வெளிவிவகார அமைச்சின் அனுமதியின்றி நாடு திரும்ப முடியும் என்று இலங்கை சிவில் விமான போக்குவரத்து ஆணையத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி ஒரு நாளைக்கு வரும் இலங்கையர்களின் எண்ணிக்கை ஒரு அதிகபட்சம் 3,500 ஆக இருக்கலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# கடைகளுக்குப் பூட்டு

(ஹற்றன்)

ஹற்றன் டிக்கோயா நகர சபைக்கு உட்பட்ட ஹற்றன் நகரில் அமைந்துள்ள மூன்று கடைகள் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மூடப்பட்டன.

வட்டவளை ஆடைத் தொழிற்சாலையில் எழுமாறாக மேற்கொண்ட பி.சி.ஆர்.பரிசோதனையின்போது குறித்த தொழிற்சாலையில் ஆண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று பரவியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனையடுத்து குறித்த நபர் ஹற்றன் நகரில் இரண்டு புடைவை கடைகளுக்கும் ஒரு செருப்பு விற்பனை நிலையத்திற்கும் சென்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்தே குறித்த கடைகள் ஹற்றன் டிக்கோயா நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் மூடப்பட்டதுடன், அதில் கடமை புரிந்த 33 பேர் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (நி-4)

# கைதிகளைப் பார்வையிட அனுமதியில்லை

(கொழும்பு)

இம்முறை கிறிஸ்மஸ் தினத்தன்று சிறைக் கைதிகளின் உறவினர்கள் சிறைச்சாலைக்கு சென்று அவர்களைப் பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வழமையாக கிறிஸ்மஸ் தினத்தன்று சிறைக் கைதிகளை பார்வையிட அனுமதி வழங்கப்பட்ட போதிலும், தற்போதுள்ள கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக இம்முறை இந்த சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தன்னை உணர்ந்த நிலை

இராமகிருஷ்ணர் வாழ்ந்த காலத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சி இது. அப்பொழுது ஒரு ஓவியர் இருந்தாராம். அவருக்கு ஒரு ஆசை இராமகிருஷ்ணர் படத்தை வரைய வேண்டும்..அதை அவரிடம் கொண்டு போய் காட்டி அபிப்பிராயம் கேட்க வேண்டும். இது தான் அந்த ஓவியரின் ஆசை.

உடனே இராமகிருஷ்ணர். படத்தை வரைந்து முடித்தார்..அதை எடுத்துக் கொண்டு போனார். இவர் போன சமயம் அங்கே இராமகிருஷ்ணர் சீடர்களோடு உட்கார்ந்திருந்தார்.விவேகானந்தரும் அங்கே இருந்தார்.

இந்த ஓவியர் கொண்டு போய் தான் வரைந்த ஓவியத்தை அவரிடம் காட்டினார். இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஓவியத்தை இராமகிருஷ்ணரிடமே காட்டினார். இராம கிருஷ்ணர் என்ன செய்தார் தெரியுமா?

அந்தப் படத்தைப் பார்த்தார்.உடனே அதன் காலைத் தொட்டார்.குருதேவருடைய இந்த செயல் சீடர்களுக்கு வியப்பை உண்டு செய்ததாம். சில பேர் மனதுக்குள்ளே குழம்ப ஆரம்பித்துவிட்டார்களாம்.என்ன இது... இது அவருடைய படம்..அவரே அவருடைய படத்தின் காலைத் தொடுகின்றார் என்று யோசித்தார்கள்.

சில பேர் ஒன்றும் புரியாமல் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

அந்த இடத்திலே சீடர்கள் மட்டுமல்ல சீடரல்லாத பல பேரும் இருந்தார்கள்.தன்னுடைய காலைத் தானே தொடுகின்ற இவருடைய செயல் பற்றி என்ன நினைப்பது? என்று அவர்களும் குழம்பிப் போய் நின்றார்கள்.

அந்த படத்தை வரைந்து அவரிடம் காட்டிய அந்த ஓவியருக்கும் அதிர்ச்சி.

இருந்தாலும் அவர் சீடரல்ல.அதனால் கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கேட்டார். என்னங்க இது... என்னாலே என் கண்களை நம்ப முடியவில்லை..இது உங்கள் சொந்த உருவப்படம்... நீங்கள் உங்கள் சொந்தக் கால்களையே தொடுகின்றீர்கள்..இது எங்களுக்கு கொஞ்சம் சங்கடமாக இருக்கின்றதே என்றார்.


இராமகிருஷ்ணரின் கண்களிலே ஆனந்தக் கண்ணீர் வழிந்ததாம். அவர் சொன்னாராம். இது என்னுடைய படம் என்பது எனக்குத் தெரியும்.ஆனால் இது என்னுடைய படம் என்பதனால் நான் இதனுடைய காலைத் தொடவில்லை. நீ என்னுடைய சமாதி நிலையை இந்த படத்திலே படம் பிடித்துக் காட்டியிருக்கின்றாய். அதனால் அதன் காலைத் தொடுகின்றேன்.. சமாதி நிலையில் யார் இருந்தாலும்–அது என்னுடைய படமாக இருந்தாலும் சரி அல்லது வேறு யாருடைய படமாக இருந்தாலும் சரி..படம் யார் என்பது முக்கியமில்லை.இதிலே எது முக்கியம் என்றால் அது தன்னை உணர்ந்த ஒரு உணர் நிலையின் படம். அப்படியிருக்கின்ற பொழுது அதனுடைய காலை நான் தொட வேண்டும். அதற்கு நீங்கள் எல்லோரும் ஏன் சங்கடப் படுகின்றீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

இப்பொழுது தான் அங்கே இருந்த சீடர்களுக்கும் மற்றவர்களுக்கும் விபரம் புரிந்ததாம்,

இதற்கு முன்பு யாரும் செய்யாததை இவர் செய்திருக்கின்றார். ஆனால் அவருடைய காரணம் மிகவும் நியாயமானது என்பதை உணர்ந்தார்களாம். இது வரைக்கும் ஆன்மீகத்திலே சமாதி நிலை அதாவது தன்னை உணர்ந்த நிலை பற்றிப் புரிந்து கொண்டோம். இல்லறத்திலே ஏற்படக் கூடிய சமாதி நிலை பற்றி உங்களுக்குத் தெரியுமா?

ஒரு அம்மா டாக்டரிடம் வந்து சொன்னார்களாம். டாக்டர் என் வீட்டுக்காரருக்கு உடம்பிலே ஏதோ கோளாறு என்று நினைக்கின்றேன். நான் எவ்வளவு நேரம் பேசினாலும் காதிலே விழாதது மாதிரியே உட்கார்ந்திருக்கின்றார்.. அப்படி என்றார்களாம். அது ஒரு பெரிய திறமை என்றாராம்.

# ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும் தில்லைக் கூத்தனை ஈழத்துச் சிதம்பரத்திலே காணும் நாள் வாராதோ?



**நடராச திருக்கோலச்சிறப்பு**

சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு திருநடனம் செய்யும் அற்புதத் திருக்கோலமே நடராச மூர்த்தம். நடராசப் பெருமானின் சிறப்பம்சங்களை இரு வகையாகப் பிரித்துக் கூறலாம். ஒன்று: அதன் அமைதி, மற்றது: அது உணர்த்தும் தத்துவம். குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், குமிண் சிரிப்பு, நடனத்துக்கென எடுத்த பொற்பாதம், குளிர்ந்த கங்கையும் பிறையுஞ் சூடிய சடை என்பவற்றோடு கூடிய புனிதமான பேரழகுப் பிழம்பாய் விளங்குகின்றது.

சிற்பம், சாத்திரம், ஆகம விதி என்ற மூன்றும் சங்கமித்த மகோன்னதமான திருவுருவமே நடராசத் திருக்கோலம். திருவாசியைப் பின்னணியாகக் கொண்டு நடனத்துக்கெனத் தூக்கிய இடது திருப்பாதம், நடனக் கலைஞர்களுக்கே உரிய ஒடுங்கிய இடை, விரிந்த மார்பு என்பவற்றோடு அருள்பாலிக்கும் வகையில் அமைந்த தன்மையும் பொருந்தி விளங்கும் சிறப்புடையது.

பிரபஞ்சத்தின் தோற்றம், நிலை பேறு, ஒடுக்கம் என்ற யாவும் நடராசப் பெருமானின் நடனத் திருக்கோலத்திலேயே உருக்கொண்டு விளங்குகின்றது. எம்பெருமான் ஆடி அருளிய அற்புத நடனங்கள் பல.

அவற்றுள் ஒன்று சொக்கத் தாண்டவம் எனப்படும். இது சுந்தரத் தாண்டவம் எனவும் பெயர் பெறும். இது நூற்றியெட்டுக் கரணங்களைக் கொண்டது என்று கூறுவர். பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய முனிவர்கள் இருவரும் நடராசப் பெருமான் ஆடிய சொக்கத் தாண்டவத்தை கண்டுகளிக்கும் பேறு பெற்றவர்கள்.

**இன்று நாம் எங்கே போவோம்?**

சிதம்பர தரிசனத்தை நமது ஈழநாட்டிலே காண்பதற்குக் காரைநகர் மக்கள் எப்பவோ வசதி செய்து விட்டார்கள். அவர்களுக்கு ஊரிலேயே சிதம்பரம் இருக்கிறது. அதுதான் ஈழத்துச் சிதம்பரம்.

இத் தலத்தில் உள்ள நடராசப் பெருமானது விக்கிரகம் அற்புதமானது. இங்குள்ள நடராச மூர்த்தியின் திருவுருவம் பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்னும் முனிவர்களுடன் கூடியது.

இவ்விதமாக முனிவர்களுடன் கூடிய நடராசர் அம்பிகா சமேதராக அமைந்திருக்கும் பாவனையில் உள்ள திருவுருவம் இந்தியாவிற்றானும் இரண்டொரு தலத்தில் மாத்திரமே உண்டென மூர்த்தி அமைப்பு முறைகளில் நிரம்பிய அறிவுள்ள தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் கூறியுள்ளார்.

தமிழக அறிஞர்களான சித்தாந்த சிகாமணி க.வச்சிரவேல் முதலியார், திருமுருக கிருபானந்த வாரியார், திருவாவடுதுறை ஆதீன வித்துவான் வீர சுப்பிரமணியம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் தண்டபாணி தேசிகர், வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன், செஞ்சொற் கொண்டல் சிங்காரவேலன், முனைவர் இரா.செல்வக் கணபதி முதலான அறிஞர்கள் ஈழத்துச் சிதம்பர நடராசப் பெருமானின் திருக்காட்சியைக் கண்டு, மெய் சிலிர்த்து, உளம் குளிர்ந்து, கண்களில் அருவி நீர் சொரிய, ஆனந்தித்து, உச்சியிற் கூப்பிய கையினராய், போற்றித் துதித்தனர்.

தில்லைச் சிதம்பரத்துக்குச் சென்று நடராசப் பெருமானின் அற்புத நடனத்தைக் காணமுடியாதவர்கள் ஈழத்துச் சிதம்பரத்துக்குச் சென்று நடராசப் பெருமானின் திருநடனத்தைக் கண்டு வணங்கிப் பேரின்பப் பேற்றையடைகின்றனர்.

கொரோனா என்னும் உலகளாவிய பெருந்தொற்று நோய் ஏற்பட்டுள்ள இன்றைய சூழலில் ஈழத்துச் சிதம்பரத்திலே அருள்பாலித்துவரும் சிவகாமி அம்பாள் சமேத நடராசப் பெருமானை - தில்லைக் கூத்தனை உள்ளத்திருத்தி வழிபடுவோம்.

"குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேயிந்த மாநிலத்தே."

என்று அப்பர் பெருமான் பாடுகின்றார்.

ஆனந்தக் கூத்தனுடைய திருமேனி அமைப்பிலே அவர் முகத் தோற்றமே தனிச் சிறப்புடையது. அதிலும் புன் முறுவல் மிகவும் அழகு வாய்ந்தது. ஆன்மாக்களின் மூவகை வினைகளையும் நீக்கியருளும் குறிப்பினையுடையது.

ஆடல்வல்லான் நடராசப் பெருமானின் திருநடனத்தைக் கண்டு வழிபடுதல் பிறவிப் பிணிக்கு மருந்தாகும். "ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும்" தில்லைக் கூத்தனது ஆருத்திரா தரிசனத்தை ஈழத்துச் சிதம்பரத்திலே காணும்நாள் வாராதோ?

இராணி வைத்தீசுவரக்குருக்கள்,
கந்தரோடை,
சுன்னாகம்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2188

**விமல்**

மனைவி : ஏங்க நமக்கு கல்யாணம் செய்து வைத்த ஐயர் இறந்திட்டாரம்....!



கணவன் : கடவுள் இருக்காண்டி செஞ்ச பாவம் சும்மா விடுமா....!

**அபி**


தேடலில் மிகவும் கொடுமையானது செலோடேப்பின் நுனியைத் தேடுவது...



அதை விட கொடுமையானது எங்களுக்கு பொண்ணு தேடுவது கம்முன்னு போவியா...!

**பிரியா**

உன் சட்டை ரௌவுசர் எல்லாம் எங்கடா..!



அத வித்துத்தான்யா ஹெல்மெட் வாங்கினேன்...!

**கவின்**


ஆசிரியர் : கடல் அரிப்பு ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்...!



மாணவன் : சொறிஞ்சு விடனும் டீச்சர்..!

**மாலினி**

எல்லா பெண்களையும் விசிலடித்து திரும்பி பார்க்க வைத்தாலும் ...



செருப்படி வாங்காத ஒரே ஜீவன் குக்கர் மட்டும் தான்...!

**கம்சா**

பாட்டி : டேய் இடி இடிக்குதடா....!



இப்போ என்ன T.V off பண்ணிட்டு அர்ஜினா அர்ஜினா சொல்லனும் அதுதானே...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

24

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



கூட்ட நடப்பெண்காணப்படாத சமயத்தில், இந்த விடயம் தலைமை தாங்கும் உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அழைப்பு மணி ஒலிக்கச் செய்து, பின்பு ஐந்து நிமிடங்களின் முடிவிலும் கூட்ட நடப்பெண் காணப்படாத பட்சத்தில் அவர் பாராளுமன்றத்தை ஒத்தி வைப்பார்.

### எவ்வாறு வாக்களிப்பது?

குறித்த விடயமொன்றிற்கு சபையின் தீர்ப்புத் தேவைப்படுமிடத்து அவ்விடயம் உறுப்பினர்களின் அங்கீகாரத்திற்காக அல்லது நிராகரிப்பிற்காகச் சபைக்கு விடப்படும். ஒவ்வொரு உறுப்பினரினது தீர்ப்பும் வாக்கெடுப்பொன்றின் மூலமாக பெற்றுக் கொள்ளப்படும். வாக்கெடுப்பானது சபை அமர்வில் உள்ளபோது மட்டுமே நடத்தப்படலாம். எந்தவொரு உறுப்பினரும் ஒரு வாக்கிற்கு உரிமையுடையவரென்பதோடு, அவர் அதனைத் தனிப்பட்ட வகையில் பிரயோகிக்கவும் வேண்டும்.

வாக்களிக்கும்போது, ஓர் உறுப்பினர் தனக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். எந்தவொரு உறுப்பினருக்கும் வாக்களிப்பதற்கான உரிமை உண்டு. எனினும் ஓர் உறுப்பினர் தான் விரும்பினால் வாக்களிக்காமலும் விடலாம். பாராளுமன்றத்தில் மூன்று வெவ்வேறு வழிகளில் வாக்கெடுப்பு நடத்தப்படலாம். அவையாவன:

#### அ. குரல் மூல வாக்கெடுப்பு

குரல் மூல வாக்கெடுப்பே மிகவும் பொதுவான வாக்கெடுப்பு முறையாகும். நிலையியற் கட்டளை 47 இன்படி, சபாநாயகர் ஒரு விடயத்தைச் சபைக்கு விடும்போது, ஒரு தீர்மானத்திற்குச் சார்பானவர்கள் "ஆம்" என்பர், எதிரானவர்கள் "இல்லை" என்பர். சபையின் கருத்துப் போதுமான அளவிலும், தெளிவாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதெனச் சபாநாயகர் உணருமிடத்து, அவர் அதனைச் சபைக்கு அறிவிக்கலாம். சபாநாயகரின் தீர்ப்பில் ஓர் உறுப்பினர் திருப்தி கொள்ளாதவிடத்து, அவர் வாக்கெடுப்பொன்றைக் கோரலாம்.

#### ஆ. பெயர் மூல வாக்கெடுப்பு

பெயர் மூல வாக்கெடுப்பிற்கான கோரிக்கையொன்று விடுக்கப்பட்டவிடத்து, நிலையியற் கட்டளை 47 இல் குறிக்கப்பட்டுள்ளவாறு சபாநாயகர் நடவடிக்கை மேற்கொள்வார். இதன் போது, வாக்கெடுப்பிற்கான மணி இரண்டு நிமிடங்களுக்கு ஒலிக்கப்பட வேண்டுமென்பதோடு, வாக்கெடுப்பு, பெயர் மூலம் நடத்தப்படுதலும் வேண்டும். செயலாளர் நாயகம், ஒவ்வொரு உறுப்பினரும் எவ்வாறு வாக்களிக்க விரும்புகிறார் என்பதை அவர்களிடம் தனித்தனியே கேட்பதன் மூலமும் அதன்படி வாக்குகளைப் பதிவதன் மூலமும் வாக்கெடுப்பை நடத்துவார். செயலாளர் நாயகம் முதலாவதாகப் பிரதம அமைச்சரையும் அதன் பின்னர் அமைச்சரவை அமைச்சர்கள், ஏனைய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஆகியோரை அவரவர் பெயர்களின் அகர வரிசை ஒழுங்கிலும் அதன் பின்னர் ஏனைய உறுப்பினர்களை அவரவர் பெயர்களின் அகர வரிசை ஒழுங்கிலும் கேட்பார். ஓர் உறுப்பினர் தான் வாக்களிக்க மறுப்பதாகக் கூறலாம். அவ்வாறான சந்தர்ப்பத்தில், செயலாளர் நாயகம் அத்தகைய உறுப்பினரின் பெயரை வாக்களிக்க மறுத்தவராகப் பதிவு செய்தல் வேண்டும்.

#### இ. எழுந்து நின்று வாக்களித்தல்

சபாநாயகர் விரும்பினால் நிலையியற் கட்டளை 47 இல் விளக்கப்பட்டவாறு வாக்கெடுப்பை நடத்தலாம். இதன்படி, உறுப்பினர்களைத் தத்தமக்குரிய இடங்களில் எழுந்து நிற்குமாறு சபாநாயகர் கேட்டுக்கொள்ளலாம். செயலாளர் நாயகம், எழுந்து நிற்பவர்களை எண்ணி முடிவைச் சபாநாயகருக்கு அறிவிக்க வேண்டும்.

சபாநாயகர் முடிவைச் சபைக்கு அறிவிக்க வேண்டும். தாம் தவறாக வாக்களித்து விட்டதாக அல்லது தமது வாக்குத் தவறாக எண்ணப்பட்டு விட்டதாக ஓர் உறுப்பினர் கருதுமிடத்து, தனது வாக்கைத் திருத்துவிக்க அவர் கோரலாம். எனினும், வாக்கெடுப்பின் முடிவைச் சபாநாயகர் அறிவிப்பதற்கு முன்னரே இதனைச் செய்தல் வேண்டும்.

#### ஈ. இலத்திரனியல் பொத்தானை அழுத்துதல்

இலத்திரனியல் வாக்குப் பதிகருவியைப் பயன்படுத்துவதன் மூலம் வாக்கெடுப்பொன்று நடத்தப்படுதல் வேண்டும். அதற்காகச் சபாநாயகரினால் அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் அவர்களது முடிவைச் சுட்டிக்காட்டுவதற்கு உறுப்பினர்கள் பொருத்தமான பொத்தானை அழுத்துதல் வேண்டும்.

### வாக்களிப்பதன் நோக்கம்

பின்வரும் பல நோக்கங்களுக்காகப் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு பிரயோகிக்கப்படுகின்றது.

### பாராளுமன்றத்தால் ஜனாதிபதியைத் தெரிவு செய்தல்

ஜனாதிபதிப் பதவியானது அதன் பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னரே காலியாகுமிடத்து, அரசியலமைப்பின் 40 ஆம் உறுப்புரையில் விதித்துரைக்கப்பட்டவாறு ஒரு விசேட நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். இக்கட்டத்தில் பாராளுமன்றம் அதன் உறுப்பினர்களுள் ஒருவரைக் காலியான இப்பதவிக்குத் தெரிவு செய்தல் வேண்டும்.

பதவி காலியான தினத்திலிருந்து ஒரு மாதத்திற்கு மேல் பிந்தாமல் அத்தகைய தேர்தல் நடத்தப்பட வேண்டும். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் இரகசிய வாக்கெடுப்பொன்று நடத்தப்படுவதோடு, அளிக்கப்பட்ட வாக்குகளில் அறுதிப் பெரும்பான்மையோடு அவர் தெரிவு செய்யப்படுதலும் வேண்டும்.

வாக்கெடுப்பு ஆரம்பிக்கும்போது செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அதிகாரியாகச் செயற்பட்டு சபாநாயகர் உள்ளிட்ட ஒவ்வொரு உறுப்பினரது பெயரையும் அழைத்து அவர்கள் வாக்களிப்பதற்கு வாக்குச் சீட்டுக்களை வழங்குவார். தான் யாருக்கு வாக்களிக்கின்றாரோ அந்த வேட்பாளரின் பெயருக்கு எதிரே இருக்கும் சதுரக் கூட்டில் 1 என்னும் இலக்கத்தை உறுப்பினர் குறிக்கலாம். தமது விருப்பத் தெரிவுகளை அவர் தாம் விரும்பியவாறு 2, 3 என்னும் இலக்கங்களை இடுவதன் மூலம் குறித்துக் காட்டலாம்.

### சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோருக்கான தேர்தல்

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் முதல் பணி மூன்று தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தலாகும். அத்தகைய தேர்தலுக்கு நிலையியற் கட்டளை 4 இன் கீழ் விசேட நடைமுறையொன்று விதித்துரைக்கப்பட்டுள்ளது. புதிய பாராளுமன்றமொன்றின் முதலாவது கூட்டத்தில் அல்லது சபாநாயகர் பதவியில் வெற்றிடம் ஒன்று ஏற்படுகின்றபோது சபாநாயகர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான நடைமுறை நிலையியற் கட்டளை 4 இன் கீழ் விதித்துரைக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் பதவிக்கு ஒருவரின் பெயர் மட்டுமே முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டிருப்பின் அந்தப் பெயர் தெரிவு செய்யப்பட்டதாகச் செயலாளர் நாயகத்தினால் வினாவின்றிப் பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென நிலையியற் கட்டளை 4 (இ) கூறுகிறது.

எனினும் சபாநாயகராக ஒன்றிற்கு மேற்பட்ட பெயர்கள் முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டிருப்பின் தேர்தலொன்று நடத்தப்படுதல் வேண்டும். வாக்கெடுப்பிற்கான மணி அடிக்கப்பட்டதும், செயலாளர் நாயகத்தினால் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒவ்வொரு வாக்குச்சீட்டு வழங்கப்பட வேண்டுமென்பதோடு, உறுப்பினர்கள் தாம் யாருக்கு வாக்களிக்கின்றார்களோ அவரின் பெயரை வாக்குச் சீட்டில் எழுதுதலும் வேண்டும். வாக்குச் சீட்டில் எழுதப்பட்ட பெயர் தெரியாதவாறு அது மடிக்கப்பட்டு வாக்களிக்கும் உறுப்பினரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

அதன் பின்னர் வாக்குச் சீட்டுக்கள் சேகரிக்கப்பட்டு செயலாளர் நாயகத்தால் பாராளுமன்றச் சபாபீடத்தில் எண்ணப்படும். முடிவு செயலாளர் நாயகத்தால் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோரைத் தெரிவு செய்வதற்கும் இதேபோன்ற நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் சபாநாயகர் தலைமை தாங்குவதே இவ்விரு தேர்தல்களுக்குமிடையில் உள்ள ஒரே வேறுபாடாகும்.

### விசேட பெரும்பான்மை

அரசியலமைப்புத் திருத்தங்கள், அரசியலமைப்புக்கு முரணான சட்டமூலங்கள், முதலீட்டு உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு ஒரு விசேட நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். இந்தக் கட்டத்தில் விசேட பெரும்பான்மையொன்று (2/3) தேவையென்பதோடு, எதிர்காலத்தில் பார்வையிடுவதற்காக வாக்குகள் விசேடமாகப் பதியப்படுவதை உறுதிப்படுத்துமுகமாகப் பெயர் மூலம் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இரண்டாம் மதிப்பீட்டின்போது மட்டுமல்லாது, மூன்றாம் மதிப்பீட்டின் போதும் இவ் விசேட பெரும்பான்மை வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். குழு நிலைத் திருத்தம் ஒவ்வொன்றும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெறுதல் வேண்டும்.

### பிரயோக வாக்கு

வாக்குச் சமநிலை நிலவும்போது சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் உத்தியோகத்தர் பிரயோக வாக்கொன்றிற்கு உரிமையுடையவராவார். எனினும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவைப்படும்போது சபாநாயகர் பிரயோக வாக்கைப் பயன்படுத்த முடியாது.

### இருபது பேர் பெரும்பான்மையாக வாக்களித்தல்

ஒரு சில பிரேரணைகளை நிறைவேற்றுவதற்குச் சபையின் கூட்ட நடப்பெண் (20) தேவையாகும். யாதேனும் விசேட அலுவலைப் பரிசீலிக்கும் அல்லது முடிவுறுத்தும் நோக்கத்திற்காக மட்டும் அறிவித்தலின் பின்னர் பெரும்பான்மையான உறுப்பினர்களினால் ஏதேனும் கூட்டத்தின்போது முன்வைக்கப்படும் பிரேரணையொன்றையடுத்து, யாதேனும் ஒரு நிலையியற் கட்டளை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிலையியற் கட்டளைகள் இடை நிறுத்தப்படலாமென நிலையியற் கட்டளை 135 ஏற்பாடு செய்கின்றது.

எனினும் இவ்வொழுங்கிலான பிரேரணையொன்று அமைச்சரவை அமைச்சர் ஒருவரினால் பிரேரிக்கப்படாதவிடத்து, வாக்கெடுப்பொன்றின் மூலமே தீர்மானிக்கப்பட வேண்டுமென்பதோடு, அத்தீர்மானத்திற்குச் சார்பாக இருபதுக்குக் குறைவான உறுப்பினர்களே வாக்களித்ததாகக் காணப்படின் அது தோற்றதாக அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(தொடரும்...)

# களுத்துறையில் அபாய கட்டம்; 55 கர்ப்பிணிகளுக்கு தொற்று உறுதி

## அரச மருத்துவ சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**களுத்துறை மாவட்டத்தில் மாத்திரம் இதுவரையில் 55 கர்ப்பிணி தாய்மாருக்கு தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.**


கொழும்பில் நேற்று முன் தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் ,

அபாயமற்ற பகுதிகள் என்று கருதப்படும் இடங்களில் கூட எழுமாறாக பி.சி.ஆர்.பரிசோதனைகளை முன்னெடுக்கும் போது கணிசமானளவு தொற்றாளர்கள் இனங்காணப்படுகிறார்கள். மேலும் கிளை கொத்தணிகள் உருவாகக் கூடிய வாய்ப்புக்களுள்ளன. வெள்ளவத்தை பிரதேசத்தில் 300 பி.சி. ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட்டதில் 12 பேருக்கு தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மற்றும் களுத்துறை ஆகிய பிரதேசங்கள் அபாயமுடையவை என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது. குறிப்பாக களுத்துறை மாவட்டத்தில் அபாய நிலைமை தீவிரமாக அதிகரித்துச் செல்கிறது. கொழும்பில் அபாய நிலைமையை அவதானித்து வரும் அதேவேளை, களுத்துறையிலும் நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டும்.

களுத்துறை மாவட்டத்தில் இதுவரையில் 55 கர்ப்பிணி தாய்மாருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## வாழ்வை பிரகாசமாக்கும் தீபாராதனை

கோவிலில் மூலவருக்கு அபிஷேகம், அலங்காரம் செய்து நைவேத்தியம் படைத்து பூஜிக்கப்பட்ட பிறகு கருவறை திரைச்சீலை விலக்கப்படும். அப்போது இறைவனுக்கு தீப ஆராதனை (ஆரத்தி) காட்டப்படும்.

சர்வ அலங்காரத்தில் ஜெக ஜோதியாக மின்னும் மூலவர் விக்கிரகத்துக்கு தீபம் காட்டப்படும் போது மண்டபத்தில் திரண்டிருக்கும் பக்தர்களிடம் புத்துணர்ச்சி பொங்கும். இறைவா என்றபடி மனம் மூர்த்தியிடம் சென்று விடும்.

அந்தச் சமயத்தில் பக்தர்கள் அனைவரும் பக்தியுடன் கைகளை உயர்த்தி தலை மீது குவித்து இறைவனை வழிபடுவார்கள்.

கடவுள் பலவித உருவங்களில் வணங்கப்பட்டாலும் முழு முதல் கடவுள் ஒருவரே என்பதை தீப ஆராதனை உணர்த்துகின்றது.

அதுமட்டுமல்ல, தீப தரிசனம் நமக்கு மனத்தூய்மையைத் தருகிறது. நம் மனதில் உள்ள அக இருள்களான பயம், வெறுப்பு, பொறாமை, வறுமை, சோர்வு, தாழ்வு மனப்பான்மை போன்றவை நம் மனதை விட்டு நீங்க தீப ஆராதனை உதவுகிறது.

இறைவனுக்கு தீப ஆராதனை காட்டி முடித்ததும் அதை அர்ச்சகர் பக்தர்களிடம் எடுத்து வருவார். அதை நாம் நமது இரு கைகளிலும் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும். மூன்று முறை தொட்டு வணங்குவது நல்லது.

அப்போது, இறைவா உன்னிடம் இருந்து வந்துள்ள இந்த ஒளி, என் மனதிலும் வாழ்விலும் உள்ள எல்லா இருளையும் விரட்டட்டும் என்று மனதுக்குள் பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும். நிச்சயமாக தீப ஆராதனை நம்மை சூழும் இருள்கள் அனைத்தையும் போக்கி நமது வாழ்வைப் பிரகாசம் அடையச் செய்யும். தீபாராதனையின் போது அர்ச்சகர் பல வகையான தீபங்களை இறைவனின் திருவுருவத்திற்கு முன்னர் காட்டுவார். நித்தியம், நைமித்தியம், சாமியம் என்று சொல்லப்படும் மூவகை பூசைகளிலும் தீபாராதனை இடம்பெறும்.

தீபாராதனை பெரும்பாலும் அதற்கு என தயாரிக்கப்படும் தட்டுக்களையே பயன்படுத்துவார்கள். ஆகம விதிப்படி பூஜைகள் நடைபெறும் ஆலயங்களில் தீபம் ஏற்றப்பட்டதும் அதன் மீது பூக்கள் போட்டுப் பார்த்தல், தண்ணீர் தெளித்தல், தட்டுதல், மந்திரம் சொல்லுதல் என்ற 4 வகை உபசாரம் செய்த பிறகே தீபத்தை எடுத்து மூலமூர்த்தி முன்பு சுற்றுவார்கள்.

தீபங்களைச் சுற்றும் போது விக்கிரகத்தின் முகம், கண், மூக்கு, கழுத்து, மார்பு, கால்கள், பாதம் என்ற படி சுற்றுவார்கள். இடது காலை சமமாகவும் வலது காலை சற்று தூக்கி கொண்டும் தீபம் காட்டுவார்கள்.

மூன்று முறை சற்றுவது-பஞ்சபூதங்களால் நமக்கு எந்த இடையூறும் ஏற்படாமல் நன்மைகள் உண்டாக வேண்டும் என்பதற்காக.

தீபாராதனை செய்யப்படும் நேரத்தில், அனைத்து தெய்வங்களும் தீபங்களில் வந்திருந்து, இறைவனை தரிசித்து செல்வதாக சொல்வார்கள். இதனால் தான் இறைவனுக்கு செய்யப்படும் உபகாரங்களில் தீபாராதனை மிகவும் சக்திவாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

தீபாராதனைக்கு இன்னொரு தத்துவமும் சொல்லப்படுவது உண்டு. அதாவது இறைவன் ஜோதி வடிவாகத் திகழ்பவன். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## மழை அதிகரிக்கும்

(கொழும்பு)

நேற்று முதல் எதிர்வரும் சில நாட்களுக்கு நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மழை அதிகரித்துப் பெய்யக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 75 மில்லி மீற்றர் அளவிலான இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி-4)

## தொற்றிலிருந்து குணமாகி வீடு திரும்பியவர் மரணம்

(காலி)

காலியில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பின்னர் குணமடைந்து வீடு திரும்பிய நபர் உயிரிழந்துள்ளார்.

வீடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 76 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என காலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த அவர் நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## காலியில் பாடசாலைகளுக்கு தொடர்ந்தும் பூட்டு

(காலி)

கொவிட்-19 எச்சரிக்கை காரணமாக காலி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என தென்மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ரஞ்சித் யாப்பா தெரிவித்துள்ளார்.

காலி மாவட்ட கொவிட்-19 தடுப்பு குழுக் கூட்டத்தின்போது இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

காலி மாவட்டத்தில் 26 பாடசாலைகள் கடந்த வெள்ளிக்கிழமை மூடப்பட்டன.

இதேவேளை, 2021 ஆம் ஆண்டிற் கான கல்வி நடவடிக்கைகள் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருப்பதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (நி-4)

## 9 பொலிஸ் பிரிவுகள் தொடர்ந்தும் தனிமையில்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் 9 பொலிஸ் பிரிவுகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் சமூக இடைவெளியை பேணாமை மற்றும் முகக் கவசம் அணியாமை ஆகிய காரணங்களுக்காக இது வரை 1,611 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார். (நி-4)

## திடீரென மயங்கி விழுந்த பொலிஸ் அதிகாரி

(திருமலை)

திருகோணமலை, நிலாவெளி பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு உதவிப் பொலிஸ் பரிசோதகர் திடீரென மயங்கி வீழ்ந்துள்ள நிலையில் உயிரிழந்துள்ளார்.

திருமலை நாச்சிக்குடாவைச் சேர்ந்த 54 வயதுடைய சுமண பண்டார என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

நேற்று ஞாயிறு அதிகாலை 2.45 மணியளவில் கடமையில் ஈடுபட்டிருந்தபோது நெஞ்சு வலி காரணமாக மயங்கி வீழ்ந்த அவரை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது வழியில் உயிரிழந்துள்ளார். (நி-4)



# சிறுவர் அரங்கம்

## சூடான சூப்



ஒருநாள் முல்லா நண்பர்கள் பலருடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கையில் அக்கூட்டத்தில் வெளியூர் நண்பர்களும் சிலர் அமர்ந்திருந்தார்கள்.

நண்பர்களில் ஒருவர் மட்டும் எழுந்து வெளியூரிலிருந்து வந்திருந்தவர்களுக்கு முல்லாவை அறிமுகப்படுத்தி வைத்தார்.

முல்லாவைப் பற்றி அளவுக்கு அதிகமாக பாராட்டி பேசிய நண்பர், முல்லாவுக்கு தெரியாத விடயமே உலகத்தில் இல்லை என்றார்.

அதனைக் கேட்ட வெளியூர் நண்பர்களில் ஒருவர் எழுந்து முல்லாவுக்கு குர்தீஷ் மொழி தெரியுமா? என்று கேட்டார்.

முல்லா, தனது அறியாமை காண்பித்துக் கொள்ளக்கூடாதே என்று குர்தீஷ் மொழி தெரியும் என்றார்.

மேலும், அந்த மொழியில் இரண்டொரு சொற்கள் தெரியும் என்றார். குர்தீஷ் மொழியில் ஏதேனும் ஒரு சொற்களைக் கூறுங்கள் என்றனர்.

குர்தீஷ் மொழியில் ஆஷ் என்றால் சூடான சூப் என்று பொருள் என்றார் முல்லா. ஆறின சூப் என்பதற்கு குர்தீஷ் மொழியில் என்ன சொல்வார்கள்? என்று ஒருவர் கேட்டார்.

உடனே, முல்லா தனக்கு குர்தீஷ் மொழி தெரியாது என்பதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சாமர்த்தியமாக பேச ஆரம்பித்தார்.

முல்லா, நண்பரே! குர்தீஷ் மொழியினர் எப்போதும் சூடான சூப்பைத்தான் சாப்பிடுவார்கள்.

ஆறின சூப்பே அவர்களுக்கு பிடிக்காது. அதனால் அவர்கள் மொழியில் ஆறின சூப் என்பதற்கு எந்தச் சொல்லும் கிடையாது என்று கூறி சாமர்த்தியமாக சொல்லி சமாளித்தார்.

**நீதி: சாமர்த்தியமாக செயற்பட்டால் எப்படிப்பட்ட சூழலிலும் தப்பிக்க இயலும்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சென்றதில்லையா? வென்றதில்லையா?

61



கிரேக்கர்களின் தெய்வம் அப்பலோ

குதிரைப்படையில் ஹெட்டைரோய் (Hetairoi) என்கின்ற அந்தஸ்து கிடைத்தால் அது கௌரவமான விடயம்.

**வீரர்களின் திறமைகள் சாதனைகள், அனுபவம் ஆகியவற்றை வைத்தே இந்த அங்கீகாரம் வழங்கப்படும்.**

வெறும் அறுநூறு குதிரைப்படை வீரர்களை மட்டுமே கொண்டிருந்த மாசிடோனியப் படை, மன்னார் பிலிப்பின் காலத்தில் தான் மூவாயிரமாக உயர்த்தப்பட்டது.

அடிக்கடி வரும் யுத்தங்கள், களப்பலிகள் ஆகியவற்றால் குதிரைப் படைகளுக்கு கூடுதலாக ஆட்கள் தேவைப்பட்டன.

அதனால் பூர்வீக மாசிடோனியர்களைத் தாண்டி தெஸ்ஸாலியர்கள் மற்றும் இதர கிரேக்கப் பகுதிகளில் இருந்து வீரர்களைத் தேர்வு செய்யத் தொடங்கினர்.

இந்த நடைமுறை அலெக்சாண்டர் காலத்தில் தான் அறிமுகம் செய்யப்பட்டது.

குதிரை வீரர்களுக்கு வழங்கப்படும் வாள், ஈட்டி தலைக்கவசம், உடற்கவசம், மார்புக் கவசம், காலணி எல்லாமே தகுதிக்கேற்ற வகையில் தான் வழங்கப்பட்டன.

சிறப்புத் தகுதி கொண்டவர்களுக்கு உலோகத்தால் ஆன தலைக்கவசம்.

மற்றவர்களுக்கு இரும்பு அல்லது வெண்கலத்தால் ஆன கவசங்கள். மார்புக் கவசமும் அப்படித்தான்.

சிறப்புத் தகுதி பெற்றவர்களுக்கு வலுவான மார்புக் கவசம். சிலருக்கு மட்டும் உலோகத்தால் ஆன அங்கி வழங்கப்பட்டது.

வாள் என்பது வழக்கமாக எல்லோரும் பயன்படுத்தும் ஆயுதம். அந்த வாளின் ஒரு முனை கூர்மையாக இருக்கும். இன்னொரு முனை கைப்பிடியோடு இணைக்கப்பட்டிருக்கும்.

பளபளவென பட்டை தீட்டப்பட்டிருக்கும் அந்த வாளை வீசினால் எதிரியின் தலை கண்ணிமைக்கும் நேரத்தில் தரையில் விழுந்துவிடும். அதைக் கையாள்வதற்கென்றே சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (தொடரும்)

நற்செயல்கள் அனைத்தும் இறுதியில் பலன் அளித்தே தீரும் என்பது என் உறுதியான நம்பிக்கை. – காந்தியடிகள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமையாக ஜெனிவாவைக் கையாள வேண்டும்

கொரோனாவுடன் வாழப் பழகுதல் என்ற நிலைப்பாட்டுக்கு உலக நாடுகள் வந்து விட்டன.

அந்தளவுக்கு உலகம் முழுவதையும் கோவிட் – 19 ஆக்கிரமித்து விட்டது.

கோவிட் – 19க்குப் பயந்து வீடுகளுக்குள் முடங்கினால் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குப் போய்விடும் என்ற எச்சரிக்கைகள் காரணமாக சுயபாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றியவாறு இயல்பு வாழ்வுக்குத் திரும்புதல் என்ற நிலைப்பாட்டை உலக நாடுகள் எடுத்துள்ளன.

இதன்காரணமாக இலங்கையும் அத்தகையதொரு முடிவை நோக்கி நகர்வது தெரிகிறது.

ஆக, கொரோனாவுடன் வாழப் பழகுதல் என்ற முடிவுக்கு உலக நாடுகள் வந்துள்ள போது, இங்கு இலங்கையில் ஈழத்தமிழர்களின் வாழ்வியல் என்பதே கேள்விக்குறியாகியுள்ளது.

2009ஆம் ஆண்டில் வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த கொடும் போரில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் தொடர்பில் இன்னமும் நீதி வழங்கப்படவில்லை.

இது விடயத்தில் நீடித்து வருகின்ற கால தாமதங்களுக்குப் பல காரணங்களைப் பட்டியல்படுத்த முடியுமாயினும்,

தமிழினத்தின் அரசியல் தலைமை – அரசியல் தரப்புகள் உறுதியான தீர்மானங்களை எடுக்கத் தவறியமையும் நல்லாட்சி அரசாங்கத்துடன் இசைந்து பயணித்தமையும் இலங்கை அரசுக்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்குக் கால அவகாசம் வழங்க வேண்டும் என நம் ஈழத் தமிழ்த் தலைமை ஏற்றுக் கொண்டமையும் எங்களின் பிரச்சினைகளை வலுவிழக்கச் செய்துள்ளன.

உண்மையில், இலங்கை அரசாங்கம் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்பது ஒருபோதும் சாத்தியப்படப் போவதில்லை.

ஆக, வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தம் தமிழின அழிப்பை அடிப்படையாகக் கொண்டது என்ற வகையில் சர்வதேச தலையீடு அவசியமாகிறது.

சர்வதேசத் தலையீட்டை இலங்கை அரசாங்கம் ஏற்காது என்ற கருத்தியல் நமக்குத் தேவையற்றது.

நாம் கேட்பதெல்லாம் எம் இனத்தின் உரிமையும் வன்னிப் போரில் எம் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கான நீதியுமாகும்.

எனவே இதனைத் தரக்கூடிய தகைமை சர்வதேச சமூகத்திடமும் ஐ.நா சபையிடமுமே உண்டு.

இங்குதான் ஜெனிவாவைக் கையாளுதல் என்ற விடயம் முதன்மை பெறுகிறது.

ஆக, இனியேனும் தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றுபட்டு, உலக அரசியல் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று, கால அவகாசம் என்பதற்கு இம்மியும் இடம் கொடுக்காமல் தமிழ் இனத்தின் பேரால் விசுவாசமாகச் செயற்பட வேண்டும்.

ஆம், ஜெனிவாவைக் கையாளுவதற்காகவேனும் தமிழ்த் தரப்புகள் ஒன்றுகூடி ஒருமித்த கருத்தோடு இராஜதந்திரமாகச் செயற்படுவது மிக மிக அவசியம்.

## சுகாதார விதிமுறைகளை பின்பற்றாவிட்டால் தனிமைப்படுத்தல் நீடிக்கப்படும் – அஜித் ரோகண

(கொழும்பு)

சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் விதிமுறைகளை பொதுமக்கள் பின்பற்றாவிட்டால் சில இடங்களில் தனிமைப்படுத்தல் நீடிக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோகண எச்சரித்துள்ளார்.

எவரும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியிலிருந்து வெளியே செல்ல முடியாது. மீறி எவராவது வெளியே சென்றால் தனிமைப்படுத்தல் சட்டங்களின் கீழ் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றுங்கள்- பிசிஆர் சோதனைக்காக மாதிரிகளை வழங்குமாறு கேட்கப்பட்டால் அதற்கு ஒத்துழைப்பை வழங்குங்கள். சுகாதார வழிமுறைகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தாதீர்கள்.

விதிமுறைகளை உரிய விதத்தில் பின்பற்றினால் கூடிய விரைவில் குறிப்பிட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தல் நீக்கப்படும் என்றார். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** குளுமாட்டுச் சந்தி, மகாகச்சக்கொடிய கிராமம், அறுவந்துளவ ஆகிய பிரதேசங்களிலும் மின் சாரம் தடைப்படும்.

## புங்குடுதீவு மீன்பிடி இறங்குதுறை புனரமைக்கப்படும் - டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்களது தேவைகருதி புங்குடுதீவு தெற்கு மண்காடு பகுதியில் உள்ள மீன்பிடி இறங்கு துறைமுகத்தைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க குறித்த பகுதிக்கு நேரில் விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் கடற்றொழிலாளர்களது பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது குறித்த பகுதி இறங்குதுறை ஆழமாக்கப்பட வேண்டும் என்றும் சுமார் 300 மீற்றர் நீளமும் 50 மீற்றர் அகலமும் கொண்ட அணை கட்டப்பட வேண்டும் என்றும் அப்பகுதி கடற்றொழிலாளர்களால் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்நிலையிலேயே அமைச்சர் குறித்த இறங்குதுறையை புனரமைப்பதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் தெரிவித்தார். (5-4)

## சிதம்பர தரிசனம்

(ஈழத்துச் சிதம்பரத்தில் 2020.12.21) இன்று திருவெம்பாவை ஆரம்பம்

### பாமணக்கும் தமிழாலே பாடித் தொழுகின்றேன்

**ஆனைத்தோல் புலித்தோலால் அங்கம் மறைத்தானை**
**வானை அளந்தானை வண்டமிழைக் காப்பானை**
**வில்லடியும் கல்லடியும் சொல்லடியும் விருப்பமுடன்**
**நல்லடியாய்ப் பெற்றானை நச்சரவம் பூண்டானை**
**நிலவுத் தலையானை நீள் முடிகள் கலையானை**
**கலைகள் வளர்ப்பானை காரை ஈழத்து சிதம்பரனை**
**சோமசுந்தரனைச் சுகமூட்டும் சௌந்தராம்பிகை பாகனை**
**பாமணக்கும் தமிழாலே திருவெம்பாவையில் தொழுகின்றோம்**

செந்நாப்புலவர் மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### பிறப்பின் நோக்கம்



ஆறாவது அறிவைக் கொண்ட இந்த மனிதன் வாழ்வின் நோக்கம், அறிவு முழுமை பெற வேண்டும். இயற்கையின் முழுமையை உணர வேண்டும், எந்தச் சக்தியிலிருந்து நாம் தோன்றி, வந்து இயங்கிக் கொண்டிருக்கிறோமோ அந்த அடிப்படையை உணர்ந்து அதோடு லயமாகி இணைந்து கொள்ள வேண்டும் என்பதேயாகும். இதுதான் பிறப்பின் நோக்கம். **(This and this alone is the purpose of life).**

சுருங்கச் சொன்னால் இயற்கையானது பல படித்தளமான பரிணாம இயக் கத்திலே தோற்றங்களாகி, ஓரறிவு முதற்கொண்டு ஆறறிவு வரையிலே வந்து மனிதனாகி, தன்னுடைய மதிப்பையும், தன்னுடைய தகைமையையும், தன்னுடைய அழகையும் ரசிக்கவும், உணரவும் அந்த இயற்கையே எடுத்துக் கொண்ட ஒரு உன்னதமான வடிவம் எதுவோ அதுதான் மனிதன்.

மனிதனில் தான் அறிவினுடைய முழுமையைப் பெற முடியும். பழக்கத்தின் வழியே நாம் சிக்கி, தேவை, பழக்கம், சூழ்நிலையின் கட்டாயம் (நிர்ப்பந்தம்). இந்த மூன்றினாலும் உந்தப்பட்டுச் செயல் செய்து கொண்டிருக்கிறோம். இவற்றிலிருந்து விளக்கம் பெற்று, விளக்கத்தின் வழியே நாம் வாழ்க்கையை மாற்றி அமைக்க வேண்டுமானால் உடனடியாக விளக்கம் வராது, பழக்கத்திலிருந்து உடனடியாக மாறி விடவும் முடியாது. முறையான பயிற்சி வேண்டும். விளக்கத்திலேயும் பயிற்சி வேண்டும். அப்படி விளங்கிக் கொண்ட பிறகு நாம் எங்கே இருக்கிறோம், எங்கே போக வேண்டும், அதிலுள்ள வேறுபாடு, தூரம் என்ன என்பதைக் கண்டு, படிப்படியாகத் தன்னை மாற்றி உயர்த்தி அந்த இடத்தை அடைய வேண்டும். அத்தகைய திருப்பம் எதுவோ அது தான் பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் எனப்படும் ஆன்மீக வாழ்வு ஆகும்.



லங்கா பிரீமியர் லீக் தொடரில் வெற்றி பெற்ற ஜப்னா ஸ்டாலியன்ஸ் வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சிறப்புற இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)

# சிநேகபூர்வ வெற்றிக்கிண்ணம்-2020 ஏபி அணி முதலாவது வெற்றி

சிநேகபூர்வ வெற்றிக் கிண்ணம் 2020 தொடருக்கான இறுதிப்போட்டி ஏபி, விக்டோரியன்ஸ் அணிகளுக்கிடையே நடைபெற்றது.

இப்போட்டியில் விக்டோரியன்ஸ் அணியை ஏபி அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தொடரில் முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோரியன்ஸ் அணி 27.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியில் கிருஷாந்-26, செந்தூரன்- 20, பிரதீஸ் 14 ஓட்டங்களைப் பெற்றனர். ஏபி அணி சார்பில் விஷ்ணு, ராகுலன்-3, பிரதீபன்-2, ஞானா, உத்தமன் ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஏபி அணி 29.2 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

போட்டியில் கஜீபராஜ்-18, ஆதித்தன்-13, ராகுலன்-10, சிலோஜன்-20, சுஜன் ஆட்டமிழக்காது-11, விஷ்ணு ஆட்டமிழக்காது -25 ஓட்டங்களைப் பெற்றனர்.

விக்டோரியன்ஸ் சார்பில் கஜேந்திரன்-3, பிரதீஸ்-2, பிரசாந், சிவனுஜன், செந்தூரன் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். (4)

# பிரேசில் ஜாம்பவானின் சாதனையை நிகர் செய்த மெஸ்ஸி




வலென்சியாவுக்கு எதிரான போட்டியில், பார்சிலோனாவுக்காக கோல் அடித்ததன் மூலம் லியோனல் மெஸ்ஸி, பிரேசில் ஜாம்பவான் பீலே ஒரே கிளப்பிற்காக 643 கோல்களை அடித்து படைத்திருந்த சாதனையை நிகர் செய்துள்ளார்.

33 வயதான ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த மெஸ்ஸி, ஆட்டத்தின் முதல் பாதிக்கு சற்று முன்னதாக இந்த சாதனையை நிகழ்த்தினார்.

மெஸ்ஸி 2005-ஆம் ஆண்டில் அல்பாசெட்டிற்கு எதிராக பார்சிலோனாவுக்காக தனது முதல் கோலை அடித்தார்.


1956 மற்றும் 1974-க்கு இடையில் பிரேசில் அணியின் சாண்டோஸ்'க்காக பீலே, தாம் விளையாடிய 19 தொடர்களில் மொத்தம் 643 கோல்களை அடித்தார்.

இச் சாதனை மூலம் இன்ஸ்டாகிராமில் பீலேவிடமிருந்து ஒரு அருமையான வாழ்த்து குறிப்பைப் மெஸ்ஸி பெற்றுள்ளார். அந்தப் பதிவில் "உங்கள் இதயம் அன்பால் நிரம்பி வழிகிறது. உங்கள்பாதையை மாற்றுவது கடினம்.

உங்கள் வரலாற்று சாதனைக்கு வாழ்த்துக்கள், லியோனல் என குறிப்பிட்டுள்ளார். (4)

# வேதனைகள் சொல்ல வார்த்தைகள் இல்லை

## கோலி கவலை



முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றும் தோல்வி அடைந்துவிட்டோம் என்ற நிலையில் ஏற்பட்ட வேதனையான உணர்வுகளை சொல்ல வார்த்தை இல்லை என இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோலி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடிலெய்டு நகரில் நடைபெற்றது.

பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணி படுதோல்வி அடைந்தது.

குறிப்பாக, இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணி வெறும் 39 ரன்களில் ஆட்டமிழந்தது. அபாரமாக ஆடிய அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இது தொடர்பாக விராட் கோலி தெரிவிக்கையில்,

அந்த வேதனையான உணர்வுகளை சொல்ல வார்த்தைகள் இல்லை. நாங்கள் பட்டிங் செய்ய வந்த போது 60 ரன்களுக்கு மேல் முன்னிலையில் இருந்தோம்.

ஆனால், உடனடியாக அனைத்து விக்கெட்டுகளையும் இழந்துவிட்டோம்.

இரண்டு நாட்கள் சிறப்பாக ஆடி, போட்டியில் ஒரு நல்ல நிலையில் இருந்தோம்.

ஆனால், ஒரு மணி நேரத்தில் தோல்வி அடைந்துவிட்டோம்.

கண்டிப்பாக இன்றைய ஆட்டத்திலிருந்து கற்றுக் கொண்டு அணி வீரர்கள் அடுத்த ஆட்டங்களில் சிறப்பாக ஆடுவார்கள் என நம்பிக்கை உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (4)




வவுனியா மாவட்ட சதுரங்க சம்மேளனம் மற்றும் ஐபி சதுரங்க கல்லூரியின் ஏற்பாட்டில் "சதுரங்கம் களர்ஸ்டே" நிகழ்வு வவுனியா பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படங்கள்: சதீஸ்)

## நால்வர்...

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் நான்கு இந்திய மீனவர்களும் ஒரு படகும் காரைநகர் கடற்பகுதியில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட நால்வரும் காரைநகர் கடற்படை முகாமில் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்குரிய பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் கடற்படைத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ஞா-33)

## வவுனிக்குளத்தில்...

குளத்தில் காணாமல்போன தந்தையும் மகளும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

வவுனிக்குளம் குளக்கட்டில் பயணம் செய்து கொண்டிருந்த கப் ரக வாகனம் ஒன்று நேற்று முன்தினம் மாலை குளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியிருந்தது.

வாகனத்தில் குடும்பத் தலைவர் ஒருவரும் அவருடைய இரண்டு பிள்ளைகள் மற்றும் அயல் வீட்டைச் சேர்ந்த சிறுவன் உட்பட நால்வர் பயணம் செய்துள்ளனர்.

வாகனம் குளத்திற்குள் பாய்ந்து விபத்துக்குள்ளான நிலையில், வாகனத்தில் பயணம் செய்த குறித்த குடும்பஸ்தரின் மகன் வாகனத்தில் இருந்து வெளியே வந்து குளத்தில் நீந்தி கரை சேர்ந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், இராணுவத்தினர், பொதுமக்கள் இணைந்து வாகனத்தை குளத்தில் இருந்து மீட்டு எடுத்தபோது வாகனத்தில் இருந்து சிறுவன் ஒருவன் சுயநினைவற்ற நிலையில் மீட்கப்பட்டு மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

ரவீந்திரகுமார் சஞ்சீவன் (வயது-13) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனத்தை செலுத்திச் சென்ற கிருஸ்ணபிள்ளை ரசீந்திரன் (வயது-37), அவரது மூன்று வயது மகளான ரசீந்திரன் சார்ஜனா ஆகியோரைத் தேடும் நடவடிக்கை தொடர்ந்த நிலையில், நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கடற்படையின் சுழியோடிகளின் உதவியுடன் அவர்களும் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

குறித்த சம்பவத்தினால் முல்லைத்தீவு பெரும் சோகமயமானது. (ஞா-281)

## அனைத்துப் பாட...

வித்ததாவது,

நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளையும் திறப்பது தொடர்பாக விரைவில் ஒரு உறுதியான அறிக்கையை வெளியிட முடியும். ஒருவேளை இன்றும் அந்த அறிக்கை வெளியிடப்படலாம்.

நாட்டில் மாணவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாக்க விரைவில் பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக நாங்கள் தற்போது சுகாதார அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடி வருகிறோம்.

அவர்கள் வழங்கிய பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு பாடசாலைகளைத் திறப்பது பொருத்தமானது என்று பௌத்த தேரர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்றார். (ஞா)

## மாணவனுக்கு...

வடக்கைச் சேர்ந்த குறித்த மாணவர் வெளிநாடு ஒன்றிற்கு செல்வதற்காக கொழும்பு சென்ற நிலையில் கொழும்பு தனியார் மருத்துவமனையில் அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஞா-250,299)

## தவிசாளரின்...

இளவாலை, வசந்தபுரம் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்று சுமார் ஒரு மணி நேரத்துக்குள் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் தற்போது இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ஞா)

## ஈ.பி.டி.பி,...

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடனும் (ஈ.பி.டி.பி.) நாம் நேரில் பேச்சு நடத்துவோம்.

அத்துடன், எதிர்வரும் 23ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெறும் கலந்துரையாடல்களின் பின்னரே யாழ்.மாநகர சபையில் மேயருக்கு யாரைக் களமிறக்குவது என்பது தொடர்பில் தீர்மானிப்போம்."

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (ஞா)

## அமைச்சரவை...

வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதாகவும் இதனால் அமைச்சர்களது நிலை குறித்த அச்சம் ஏற்பட்டுள்ளதால் ஜனாதிபதி கோட்டாபய பெரும் குழப்பத்தில் இருப்பதாக தெரியவருகிறது.

இதையடுத்து பெரும் குழப்பமடைந்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர்களைக் காப்பாற்றும் நடவடிக்கையில் களமிறங்கியுள்ளார் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று நேற்று பரபரப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாகவே அண்மைய அமைச்சரவைச் சந்திப்புக்கள்கூட இணைய வழி ஊடாக நடத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## 592...

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனவரி முதல் நேற்று வரை 37 ஆயிரத்து 261பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஞா)

## மருதனார்மடம்...

பிசிஆர் மாதிரிகள் நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பரிசோதனை செய்யப்பட்டது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய பணிமனைக்குட்பட்ட பகுதியில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்ட இருவருடன் மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடைய 90 பேருக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் தொற்று இனங்காணப்பட்டுள்ளது. (ஞா-18)

## கொரோனாவுக்கு...

இலங்கையில் மேலும் 5 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு - 12 பிரதேசத்தை சேர்ந்த 71 வயதுடைய பெண் ஒருவரும் பனாகொட பிரதேசத்தை சேர்ந்த 71 வயதுடைய ஆண் ஒருவரும் கொழும்பு - 8 பிரதேசத்தை சேர்ந்த 52 வயதுடைய ஆண் ஒருவரும் கொழும்பு - 2 பிரதேசத்தை சேர்ந்த 44 வயதுடைய ஆண் ஒருவரும் மற்றும் பண்டாரகம பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன் அடிப்படையில் இது வரை நாட்டில் 176 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர். (ஞா)

## பலி எண்ணிக்கை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வழமையாக டிசம்பரில் இறுதி இரு வாரங்களிலும் ஜனவரி முதல் வாரத்திலுமே நாட்டில் அனைத்து பகுதிகளிலும் மக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்படும்.

அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் நீண்டதொரு விடுமுறை வழங்கப்படுவதால் உறவினர்களின் வீடுகளுக்குச் செல்லுதல், கொள்வனவுகளில் ஈடுபடுதல், சுற்றுலா செல்லுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இக்காலப்பகுதியில் வீடுகளில் இருப்பவர்களைவிடவும் வெளியில் பலர் இருப்பார்கள். ஆனால், இம்முறை அவ்வாறு செயற்பட முடியாது. செயற்படவும் கூடாது. மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டிய காலப்பகுதி இதுவாகும்.

குறிப்பாக மேல் மாகாணத்திலும் கொழும்பு மாநகர எல்லையிலும் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது. எனவே, இப்பகுதிகளில் இருந்து வெளியிடங்களுக்கு சென்றால், அவ்வாறு செல்பவர்களில் எவருக்காவது வைரஸ் தொற்று இருந்தால் அவர்கள் செல்லும் பகுதிகளிலும் கொரோனாக் கொத்தணிகள் உருவாகக்கூடிய அபாயம் இருக்கின்றது என்றார். (ஞா)

## அனுமதியின்றி...

முடியாமல் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்கள் இந்த மாதம் 26ஆம் திகதி முதல் வெளிவிவகார அமைச்சின் முன் அனுமதியின்றி நாடு திரும்ப முடியும் என சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்துள்ளார்.

ஆனால் நாட்டிற்கு வரும் அனைத்து பயணிகளும் பி.சி.ஆர். பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்றார். (ஞா)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1642 திகதி 2020.12.20
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 01 04 23 40
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 20/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0709
வெற்றி எழுத்து C சுப்பர் இலக்கம் 01 வெற்றி இலக்கங்கள் 17 41 44 72

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 20.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2637
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 31 45 56 80
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/12/20
சீட்டிழுப்பு இலக்கம் 4342
ஆங்கில எழுத்து M வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 3 4 5 9 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2020.12.20
சீட்டிழுப்பு இலக்கம் - 379
Q 05 40 59 68
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

அத கோடிபதி
கிழமை: ஞாயிறு
சீட்டிழுப்பு இல: 1138
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 20.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 92,199,035
வெற்றி இலக்கங்கள் 06 18 21 61 ஆங்கில எழுத்து I
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: ஞாயிறு
சீட்டிழுப்பு இல: 3468
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 20.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,841,778
வெற்றி இலக்கங்கள் 18 31 44 63 ஆங்கில எழுத்து P
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி : 20.12.2020
வெற்றி வாரம் : 3019
வர்ணம் : ஊதா
வெற்றி இலக்கங்கள் 12 34 42 50 சிம்மம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,714,648

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1312 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 20/12/2020 தினம் ஞாயிறு
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் U 12 25 64 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் 59,006,881
அபிவிருத்தி லொத்தர் சபை

சுப்பர் ஜக்பொட் — கப்ருக
சீட்டிழுப்பு வாரம் 666
மஞ்சள்
திகதி 20.12 2020
ஞாயிறு
Y 10 49 51 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,296,820
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk


சூப்
பனீர்/ மஸ்ரும்
( Panner/
Mashroom )
Chilli Parotta
( சில்லி பறோட்டா )
K.K.S வீதி, கொக்குவில்
077 306 8855 (5010)

உடன் தேவை
சிங்களம் சரளமாகப்
பேசக்கூடிய பெண்
உத்தியோகத்தர் தேவை.
தொடர்பு (ஸ)
076 097 3126

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# கடந்த 17 நாட்களில் மட்டும் 7479 சிறைக் கைதிகள் விடுவிப்பு

(கொழும்பு)

நாட்டில் கடந்த 17 நாட்களில் சிறைக் கைதிகள் மற்றும் சந்தேக நபர்கள் 7 ஆயிரத்து 479 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்டவர்களில் 6 ஆயிரத்து 915 சந்தேக நபர்கள் அடங்குகின்றனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏனையோர் சிறைத்தண்டனை பெற்றவர்கள் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியைக் குறைக்கும் நோக்கில் அரசால் முன்னெடுக்கப்படும் திட்டத்தின் கீழ், இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

# முகநூல் பயன்படுத்துவோரை பதிவு செய்ய நடவடிக்கை

## அமைச்சர் கெஹலிய உறுதி

முகநூல் உட்பட சமூக வலைத்தளங்களை பயன்படுத்தும் நபர்களை பதிவு செய்யும்வேலைத்திட்டம் ஒன்றை அமைச்சு மட்டத்தில் நடைமுறைப்படுத்த உள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை குறைக்கும் நோக்கில் முகநூல் உட்பட சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவோரை பதிவு செய் யும் முறை அறிமுகப் படுத்த நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சமூக வலைத்தளங்கள் ஊடாக ஏற்படும் முரண்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாடு காணப்படுகிறது.

இதன் காரணமாகவே முகநூல் உட்பட சமூக வலைத்தளங்களை பயன்படுத்து வோரை பதிவு செய்யும் வேலைத் திட்டத்தை தமது அமைச்சின் ஊடாக மேற்கொள்ள உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

மீண்டும்
வெளிநாடுகளுக்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை


அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-934)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536


விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-899)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (4998)

கேக் ஐசிங் பணியாளர் தேவை
யாழ். நகரப் பகுதியில் இயங்கிவரும்
தனியார் நிறுவனம் ஒன்றிற்கு
கேக் ஐசிங்கில் தேர்ச்சி பெற்ற
பணியாளர் நிரந்தரமாக
உடன் தேவை. (C-970)
077 714 5399
077 869 1674

# மரண அறிவித்தல்



## சோமசுந்தரம் புவனசுந்தரம்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

தோற்றம் : 17.10.1949 மறைவு : 20.12.2020

யாழ்ப்பாணம் கச்சேரியடி, சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் புவனசுந்தரம் நேற்று (20.12.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் இராமுப்பிள்ளை - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் மயூரன் (Northlink Engineering), அனுஜா (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), தனுசா (பிரதேச செயலகம் - தெல்லிப்பழை), ஆரூரன் (Northlink Engineering), சயந்தன் (John Keells Automation (pvt)Ltd) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காஞ்சனா, வினோதரன் (தேசிய வீடமைப்பு அதிகார சபை), சுரேந்திரதேசிகர் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரணன், கிருஸ்ணிகா, ஜஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பஞ்சாட்சரம், காலஞ்சென்ற மகேஸ்வரன், மற்றும் ஜெகதீஸ்வரி (லண்டன்), இராஜேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற சோதிலிங்கம், தச்சணாமூர்த்தி (லண்டன்), காலஞ்சென்ற குமரகுருபரன், நகுலேஸ்வரி, முருகதாஸ், கௌரி, காலஞ்சென்ற திருக்கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை சண்முகநாதன், இராமுப்பிள்ளை யோகநாதன், இராமுப்பிள்ளை வேலநாதன் மற்றும் லோகநாதன், செல்வநாதன் (நகுலன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (C-974)

நாகலிங்கம் வீதி, கொக்குவில்.
076 835 4514
தகவல்: குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.